மார்ச் 2011 March | இதழ் 242 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION








21 வது ஆண்டு
th Year

Growing
with the
Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

## பேசிப் பேசியே....

இருபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பூரிப்புடன் 'தமிழர் தகவல்' தனது ஒட்டகப் பயணத்தைத் தொடருகின்றது.

புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்த தமிழ்க் குழந்தையொன்று, பருவமடைந்து மலர்ச்சியுடன் உலா வருவது போன்ற உணர்வு எங்களுக்குள் ஓடுகின்றது.

இரண்டு தசாப்த காலத்தில் இந்த மண்ணில் எத்தனையோ ஏற்றங்களையும் இறக்கங்களையும் நாம் கண்டுள்ளோம். எனினும், சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ்ச் சமூகம் உயர்வு நிலை நோக்கி நகர்வது நன்கு தெரிகின்றது.

இதே காலப் பகுதியில் எங்கள் தாயகம் சந்தித்துள்ள சவால்களை எண்ணிப் பார்க்கையில் ஒரு நெடுமூச்சு எம்மை அறியாமலே சூடாக வெளிவருகின்றது. சர்வதேசத்தின் கபடத்தனம், பாரத தேசத்தின் கழுத்தறுப்பு, சிங்கள நாட்டின் குரோதப் போக்கு என்பவைகளோடு, உள்ளிருந்தே காட்டிக் கொடுக்கும் காக்கைவன்னியர்களும் தாய்மண்ணின் இன்றைய நிலைக்குக் காரணம்.

ஒரு தாயின் மரணத்தின் பின்னர், அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடத்திலிருந்த அஸ்தி சிதைக்கப்பட்டு, நாய்களைச் சுட்டுக் கொன்று அந்த அஸ்தியின் மேல் போட்டு எரித்து..... இந்தக் கொடுமையை எழுதவே முடியவில்லை.

யாழ். நூலகத்தை எரித்தார்கள்; தமிழ்ப் பத்திரிகாலயங்களை சாம்பராக்கினார்கள்; கல்விக் கூடங்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்; வைத்தியசாலைகளை குண்டடித்து அழித்தார்கள்; வழிபாட்டுத் தலங்களை நிர்மூலமாக்கினார்கள்; இரண்டாண்டுகளுக்கு முன்னர் லட்சக்கணக்கான மக்களின் வீடுகளை அத்திவார அடையாளமே இல்லாமற் செய்தார்கள்; அப்பாவி மக்களை ஏதிலிகளாக்கி வகைதொகையின்றிக் கொன்று குவித்தார்கள்.

இத்தனைக்கும் காரணம், இவையனைத்தும் தமிழரின் பாரம்பரிய நிலமான தாயக பூமியில் அமைந்திருப்பதால்தான். இதனால், ஒரு விடயத்தை நன்றாகவே நாம் புரிந்து கொள்கிறோம்; தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்து சிங்கள நிலமாக்குவதே சிங்கள அரசின் திட்டம்.

இதனால்தான் இப்போது தமிழரின் மயான பூமிகளிலும் தங்கள் பயங்கரவாதத்தை இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்து நொருக்கித் தரைமட்டமாக்கிய போதும், தியாகி திலீபனின் சிலையைத் தகர்த்து அள்ளிச் சென்ற போதும், தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட போராளிகளின் நினைவுத் தூபிகளை காணாமற் செய்த போதும் நாம் கை கட்டி வாய் மூடி வாளாதிருந்ததன் பயனே......

தேசிய அன்னை பார்வதிப்பிள்ளை அம்மாவின் அஸ்திக்கு நேர்ந்த கதி. சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியின்போதுகூட நாம் கேள்விப்பட்டிராததை, துட்டன் மகிந்தவின் ஆட்சியில் இன்று காண்கிறோம்.

'தட்டிக் கேட்கத் தம்பி இல்லாத வீடு' போல தமிழர் தாயகம் இன்று தலைவனின்றிக் கிடக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட 'தலைவர்கள்' எனப்படுபவர்கள், 'பெரியண்ணை'யின் உத்தரவின்றி அசையமுடியாத கையறு நிலையில் நிற்கின்றனர்.

இவ்வேளையில், மீண்டும் பேச்சுவார்த்தை என்ற குரல் ஆரம்பமாகியுள்ளது. அறுபது ஆண்டுகளாகக் கேட்ட அதே குரல்தான்! பழைய கள், புதிய பாத்திரத்தில்! ஏமாறுவதற்கென்றே பேசப் போகிறோமா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோ மாகாண தேர்தல் மார்க்கம்-யூனியன்வில் தொகுதியில் கொன்சர்வேடிவ் வேட்பாளர்

# சான் தயாபரன்



ஒன்ராறியோ மாகாணத்தில் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வரும் இடங்களில் ஒன்றான மார்க்கம் - யூனியல்வில் தொகுதியில் கொன்சர்வேடிவ் கட்சியின் வேட்பாளராக திரு. சான் தயாபரன் தெரிவாகியுள்ளதாக மாகாண கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் ரிம் குடாக் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

மேற்படி தொகுதிக்கான வேட்பாளரைத் தெரிவதற்கான தொகுதி அங்கத்தவர் கூட்டம் கடந்த மாதம் ஐந்தாம் திகதி இடம்பெற்றது. மொத்தம் நால்வர் இதில் போட்டியிட்டனர். இறுதியில் ஆகக்கூடியதான விருப்பு வாக்குளைப் பெற்று சான் தயாபரன் தெரிவானார்.

கனடியத் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி மற்றைய சமூகத்தினர் மட்டத்திலும் நன்கு அறியப்பட்டவரான சான் தயாபரன், எதிர்வரும் அக்டோபர் மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாணசபைக்கான தேர்தலில் போட்டியிட அபேட்சகராகத் தெரிவாகியுள்ள முதலாவது தமிழர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அனைத்து மக்களினதும் அபிமானத்தைப் பெற்று அவர்களின் ஆதரவுடன் தாம் அபேட்சகராகத் தெரிவானது தமக்கு உற்சாகத்தையளிப்பதாக தெரிவுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாடும்போது சான் தயாபரன் தெரிவித்தார். இந்தத் தொகுதியில் தமிழர்கள் பெருமளவில் வசிப்பதாலும், சிறுபான்மை மக்கள் கணிசமாக இருப்பதாலும் சான் தயாபரனின் வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாக இவரது தெரிவுக் கூட்டத்தில கலந்துகொண்ட மக்கள் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடும்ப உறுப்பினர்கள் வருகைக்கு புதிய திட்டத்தில் முன்னுரிமையில்லை? 'சட்டவிரோத' அகதிகள் பாதிக்கப்படுவர்!

### 2010ல் 280,636 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை; ஐம்பது ஆண்டுகளில் இது ஒரு சாதனையாம்!

கனடாவின் குடிவரவுச் சட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள பாரிய மாற்றங்களால் குடும்ப மீளிணைவு (Family Reunification) என்பது பெரும் பாதிப்பினைச் சந்திக்கவுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் முன்னுரிமை நிலையிலிருந்த குடும்ப மீளிணைவு படிப்படியாக அடிநிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

தற்போது சராசரியாக ஐந்து வருடங்கள் வரையும் காத்திருக்கும் குடும்ப உறவினர்கள், இனிமேல் பத்தாண்டுகளுக்கு மேலும் காத்திருக்கும் நிலைமை இதனால் ஏற்படுமென்று குடிவரவுத்துறை நிபுணர்களும் சட்டவாதிகளும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போது சுமார் ஒரு லட்சத்து நாற்பதாயிரத்துக்கும் அதிகமான குடும்ப உறவினர் பொறுப்பேற்பு (Family class sponsors) விண்ணப்பங்கள் குடிவரவுத் திணைக்களத்தில் தேக்க நிலையிலுள்ளன. இவைகளைப் பரிசீலனை செய்து, ஒருவரைக் கனடாவுக்குள் வர அனுமதிக்கச் சுமார் பதின்மூன்று வருடங்கள் வரை செல்லலாமென்று வன்கூவரைத் தளமாகக் கொண்டியங்கும் குடிவரவு வழக்கறிஞர் ரிச்சரட் கர்லான்ட் தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஏற்கனவே சட்டப்படி குடியேறியுள்ளவர்களின் குடும்ப உறவினர்களே புதிய நடவடிக்கைகளால் பெருமளவில் பாதிக்கப்படவுள்ளனர்.

அதே சமயம், குடும்ப உறவினர் அனுமதிக்கான இலக்கை, வருடமொன்றுக்குப் பதினோராயிரமாகக் குறைக்கவும் குடிவரவு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மறுபுறத்தில், நிதி முதலீட்டுடன் வர்த்தகம் புரியவென விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாதிப்பு விடயங்களால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதைத் திசை திருப்பும் நோக்குடன், 'குடிவரவுச் சாதனைகள்' என்னும் அறிக்கையொன்றை அரசாங்கம் விடுத்துள்ளது. கடந்த ஒரு வருடத்தில் (2010ல்) மட்டும் 283,606 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும், கனடாவின் கடந்த ஐம்பது வருடத்தில் இவ்வளவு தொகையானவர்களுக்கு ஒரு வருடத்தில் இவ்வாறு வழங்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"While the western countries cut back on immigration during the recession, our government kept legal immigration levels high. Canada's post-recession economy demands a high level of economic immigration to keep our economy strong.' said Jason Kenney, the minister of Immigration and Citizenship. "In 2010, we welcomed the highest number of permanent residents in the past 50 years" the minister further said.

2010ஆம் வருடத்தில் 280,636 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை வழங்கப்பட்டதாக சொல்லப்படும்போது, இவ்வளவு தொகையானோருக்கு ஒரு வருடத்தில் உரிய அந்தஸ்துடன் கனடாவில் புதிதாக வந்து குடியேற அனுமதி வழங்கப்பட்டது போன்ற ஒரு கருத்து தொனிக்கின்றது. அது தவறு.

ஏற்கனவே கனடாவுக்குள் வசித்து வந்த 283,636 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை அட்டை (Permanent Resident card - PR card) வழங்கப்பட்டது என்பதே சரியாகும். இவர்களுள் பலர் ஐந்து முதல் பத்து ஆண்டுகள் கனடாவில் வசித்தவர்களாவர்.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவில் இடம்பெறும் குற்றச் செயல்களால் அரசாங்கத்துக்கு வருடாந்தம் சுமார் 100 பில்லியன் டாலர்கள் செலவாகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டில் குற்றச் செயல்கள் தொடர்பாக சராசரியாக ஒரு நபருக்கு 943 டாலர்கள் செலவாகியுள்ளது. புதிய சிறைச்சாலைகளை அமைப்பதும் பெரும் செலவை ஏற்படுத்துகின்றது.

ரொறன்ரோவில் அமுலிலிருந்த வாகன வரியான வருடத்துக்குரிய அறுபது டாலர்களை 2011ஆம் வருடத்துக்கு முற்கூட்டியே செலுத்தியவர்களுக்கு மீளளிக்கும் பணியை ரொறன்ரோ நகரசபை கடந்த மாதத்தில் ஆரம்பித்துள்ளது. புதிய மேயர் றொப் போர்ட் தமது தேர்தல் வாக்குறுதிக்கிணங்க இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இதனை ரத்துச் செய்துள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட உயர்ந்த மாடிமனைக் குடியிருப்புகள், மக்கள் குடியிருப்பதற்கான தரமற்றவையாக மாறி வருவது ஒரு ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய குடிவரவாளர்களே இவைகளில் வாடகை அடிப்படையில் குடியிருக்கின்றனர். இவர்கள் பல வசதியீனங்களைக் கொண்டிருப்பதாக இது தொடர்பான அறிக்கை தெரிவிக்கின்றது.

ரொறன்ரோவில் வதியும் நடுத்தரக் குடும்பங்களின் வருமானம் குறைந்து செல்கின்றது. 1981க்கும் 2006க்கும் இடைப்பட்ட காலத்தில் சராசரியாக நான்காயிரம் டாலர்களிலிருந்து ஏழாயிரம் டாலர்கள் வரை வருமானக் குறைவு ஏற்பட்டுள்ளது. ஆனால் இவர்களின் வாழ்க்கைச் செலவு பத்துக்கும் அதிகமான வீதத்தினால் அதிகரித்துள்ளதால் பெருமளவிலான குடும்பங்கள் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

ஒன்ராறியோ மாகாணம் பாரிய வைத்திய நெருக்கடியைச் சந்திக்கவுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் தட்டுப்பாடு, குடும்ப வைத்திய குழுக்கள் போதாமை, இலத்திரனியல் வைத்திய ஆவண பாதுகாப்பு போன்ற விடயங்களில் 2020ஆம் ஆண்டில் பெரும் நெருக்கடி ஏற்படுமென்று கடந்த மாதம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

செல்லிடத் தொலைபேசிகளை வாகனம் ஓட்டும்போது பாவிப்பது சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்ட போதிலும் ரொறன்ரோவில் இதனைப் பாவிக்கும் சாரதிகள் தொகை அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தின் ஒரு வாரத்தில் நகரக் காவலர் நடத்திய வீதிச் சோதனையில் 2500 வரையான சாரதிகள் அகப்பட்டனர். இதற்கான அபராதம் தற்போது 155 டாலர்களாகும்.

கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு விமானம் அல்லது கடல்வழிக் கப்பல்களில் பயணம் செய்யும் கனடியர்கள் புதிய வரியொன்றைச் செலுத்த வேண்டும். ஒரு பயணியிடமிருந்து ஐந்தரை டாலர் வீதம் அறவிடப்படுமென அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. கனடிய அரசு இதனை ஆட்சேபித்துள்ளது. புதிய வரி அமுலாகும் திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இலங்கைத் தமிழ் ஏதிலிகளை எற்றக்கொண்டு கடந்த மாதம் வன்கூவர் வந்த 'சன் சீ' கப்பலை கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் சென்று பார்வையிட்டுள்ளார். புதிதாக ஏதிலிகள் கனடா வருவதைத் தடுக்கும் நோக்கில் கடும் சட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் முனைந்து வரும் வேளையில், குடிவரவு அமைச்சருடன் பிரதமர் கப்பலுக்குள் சென்று அதனைப் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.

## வேலை அனுபவமுள்ள பயிற்சிபெற்ற குடிவரவாளருக்கு புள்ளி வழங்கும் புதிய முறை

வேலை அனுபவமுள்ள பயிற்சி பெற்ற புதிய குடிவரவாளர்களாக கனடா வர விண்ணப்பிப்பவர்களுக்குப் புள்ளி வழங்கும் முறையில் சில மாற்றங்கள் வரவுள்ளன. இது தொடர்பாக மாகாண ரீதியான பல ஆலோசனைக் கூட்டங்களை அமைச்சர் ஜேசன் கெனி தற்போது மேற்கொண்டு வருகின்றார். கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் ஆற்றலுள்ளவர்களுக்கு கூடிய புள்ளகள் வழங்கப்படலாமெனத் தெரியவந்துள்ளது.

## பிரிட்டிஷ் கொலம்பியாவின் புதிய முதலமைச்சர் கிறிஸ்ரி கிளார்க்

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் புதிய முதலமைச்சராக கிறிஸ்ரி கிளார்க் விரைவில் பதவியேற்கவுள்ளார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாகாண லிபரல் கட்சியின் புதிய தலைவராக இவர் தெரிவானார்.

இங்கு முதலமைச்சராகவிருந்த கோர்டன் காம்பல் அங்கு எச். எஸ் ரி வரியை அறிமுகம் செய்ததை அடுத்து ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பால் தமது பதவி விலகலை அறிவித்திருந்தார். புதிய முதலமைச்சராகவிருக்கும் கிறிஸ்ரி கிளார்க் முன்னர் CKNW வானொலிச் சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகக் கடமையாற்றியவர்.


## 150 மில்லியன் டாலர் ரொறன்ரோ கேட்கிறது

ரொறன்ரோ நகர தேவைகளுக்கென 150 மில்லியன் டாலர் உதவியை ரொறன்ரொ நகர மேயர் றொப் போர்ட் ஒன்ராறியோ மாகாண அரசிடம் கேட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20வது ஆண்டு பூர்த்தி விழா




சிறப்புரை

'வீணைமைந்தன்'
கே. ரி. சண்முகராஜா

தமிழர் தகவல் இருபதாவது ஆண்டு விழாவில் பாராட்டும், விருதும் பெற்ற நண்பர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க! வளர்க!

இருபது ஆண்டு அகவை - அகவை இருபது என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் இனிய பருவம் ஆகும்.

கனடிய ஊடக விளைநிலத்தில் ஆரோக்கியமாக வளர்ந்து விரிந்து பரந்து உயர்ந்தும் சிறந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் கனடிய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கபூர்வமான தகவல்களை - செய்திகளை - கட்டுரைகளை - வாசித்துப் பயன் பெற வைத்துக் கொண்டிருக்கும் தமிழர் தகவல் மாதாந்த இதழுக்கு அகவை இருபது கண்டு பேருவகை கொள்வோம்.

ஒரு குடும்பத்தின் தலைவனாகவோ - தலைவியாகவோ பொறுப்புகளையும் - தலைமைத்துவத்தையும் தாங்கிக் கொள்ள முன்னெடுத்துச் செல்லத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் பருவம் இது!

கனடியத் தமிழ் ஊடகத் துறையின் தலைமைத்துவத்தை தாங்கிச் செல்லும் இதழாக 'தமிழர் தகவல்' இதழைப் பெருமையுடன் வாழ்த்துகிறேன்.

கனடிய தமிழர் சமூகத்தின் அடையாளமாக - சமூக வாழ்வியல் குறியீடாக கடந்த இருபது ஆண்டுகளாகக் கண்ணியம் மிக்க மாதாந்த இதழாக தவறாது வெளிவந்து கொண்டிருக்கக் கூடிய 'தமிழர் தகவல்' இதழ் இன்று வாளிப்பும் - வனப்பும் மிளிர பெறுமதி மிக்க உள்கட்டமைப்புடன் அரிய - பெரிய ஆக்கங்களைத் தாங்கிக் கொண்டு வெளிவந்துள்ளது. வாழ்த்துவோம்! வரவேற்போம்! வாசித்துப் பயன்பெறுவோம்.

மொன்றியால் நகருக்கும் ரொறன்ரோ மாநகருக்கும் ஊடகப் பாலமாக அறிமுகமாகிய தமிழர் தகவல் இதழ் என்னையும் ரொறன்ரோ வாழ் தமிழர்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததே என்பதை உணரும் போது மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்!

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார்ந்த பிரமுகர்கள் - கலைஞர்கள் - எழுத்தாளர்கள் - இளைய தலைமுறை மாணவ மணிகள் என ஆண்டு தோறும் தமிழர் தகவல் விருதைப் பெற்று பெருமையும் - கௌரவமும் - அங்கீகாரமும் அடைந்துள்ளனர்.

மொன்றியால் நகரைக் களமாகக் கொண்டு இயங்கி வந்தவர்கள் இதுவரை மூன்று அன்பர்கள் தமிழர் தகவல் விருதைப் பெற்று நகருக்குப் புகழ் சேர்த்துள்ளனர். நான்காவது நபராக - இருபதாவது ஆண்டு விழாவில் என்னைக் கௌரவித்த தமிழர் தகவல் நிறுவனத்திற்கும் - நிர்வாகக் குழுவினருக்கும் - பத்திராதிபர் உயர்திரு திருச்செல்வம் அவர்களுக்கும் எனது சார்பிலும் - என் குடும்பத்தின் சார்பிலும் - மொன்றியால் வாழ் தமிழ் மக்கள் சார்பிலும் - இன்று இங்கு கௌரவிக்கப் பெற்ற விருதாளர்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழுங்காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டியவர்களைக் கவனத்தில் கொண்டு - அரிய சேவையை ஆற்றிவரும் தமிழர் தகவல் நிறுவனம் - ஒரு காலத்தில் அமரர் சுப்ரமணிய பாரதியார் போன்ற பெரியோர்களுக்குச் செய்யத் தவறிய தமிழர் தம் கடமையை - எதிர்காலம் குறை கூறவோ - பழி சொல்லவோ இடமளிக்காது தகுதியுடையவர்களைக் கௌரவித்து வரும் உயர்ந்த பண்பை நாம் போற்ற வேண்டும்.

எங்களுக்கு முன்னோடியாக முதல்வர்களாக வாழ்ந்த பெரியோர்களுக்கு இப்பாராட்டுகளையும் விருதினையும் சமர்ப்பணம் செய்கிறேன்.

வருங்காலத்தில் கனடியத் தமிழர்களை ஆய்வு செய்யும் வாழ்வியல் ஆய்வாளர்களுக்கு தகவல் பொக்கிஷமாக விளங்கக் கூடிய தமிழர் தகவல் இதழுக்கு மரியாதை செய்யும் விதமாக எனது எழுத்துப் பணி தொடர தகவல் விருது ஊக்க சக்தியாக விளங்கும். இவ்விருதின் பெருமையைக் காப்பாற்றும் வண்ணம் அனைவரும் தமிழர் சமூகத்திற்கு உழைக்க வேண்டும் என்று வேண்டி மீண்டும் வாழ்த்துக்களைக் கூறி இவ்வரிய சந்தர்ப்பத்தை வழங்கிய மதிப்புக்குரிய திரு. திருமதி. திருச்செல்வம் அவர்களுக்கும் - அவர் தம் நிறுவனத்திற்கும் வணக்கம் கூறி விடை பெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# கொலஸ்ட்ரோல்

அவருக்கு மிகுந்த அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது நான் சொன்னதைக் கேட்டு. ஆனால் நானாக எதுவும் சொல்லவில்லை. அவர் தந்த இரத்தப் பரிசோதனை ரிப்போட்டுகளை வைத்துத்தான் கருத்துச் சொன்னேன்.

"உங்களுக்கு கொலஸ்டரோல் அதிகமாக இருக்கு" இதுதான் நான் சொன்னது.

அவர் ஆச்சரியப்பட்டதிலும் நியாயம் இருக்கிறது.

அவர் தனது உணவு முறைகளில் மிகுந்த அக்கறை உள்ளவர். அத்துடன் ஒரு வெஜிடேரியன். கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்த்து காய்கறிகளையும் பழங்களையும் அதிகம் சாப்பிடுபவர். தினசரி நடைப்பயிற்சி செய்வதாகவும் சொன்னார்.

"அம்மாவிற்கு கொலஸ்டரோல் இருந்து, ஹார்ட் அட்டாக் வந்து இறந்தபடியால் நான் வலு கவனமாக இருந்தனான். இருந்தும் எனக்குக் கொலஸ்ட்ரோல் வந்து விட்டதே" எனக் கவலைப்பட்டார்.

"நீங்கள் இவ்வளவு கவனமாக இருந்தபடியால்தான் உங்களுக்கு 45 வயதுவரை கொலஸ்டரோல் பிரச்சனை வராமல் தப்பியிருக்கிறீர்கள்" என்றேன் நான்.

உண்மையில் மாரடைப்பிலிருந்தும் தப்பியிருக்கிறார். தனது ஆரோக்கியமான வாழ்க்கை முறையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தால் எதிர்காலத்திலும் தப்பிவிடுவார்.

உணவுமுறை மட்டுமே காரணமல்ல

ஒருவரது கொலஸ்ட்ரோல் வகைளில் முக்கியமானது கெட்ட கொலஸ்ட்ரோல் என்று சொல்லப்படும் LDL கொலஸ்டரோலும், ரைகிளிசரைட் (triglygeride) கொலஸ்டரோல் ஆகிய இரண்டுமாகும்.

இவை அதிகரிப்பிற்கு உணவு தவிர்ந்த ஏனைய காரணிகள் 75 சதவிகிதமாக இருக்கின்றன.

ஆனால் உணவு சார்ந்த காரணிகள் 25 சதவிகிதம் மட்டுமே.

ஏனைய காரணிகள்

குருதியில் கொலஸ்டரோல் அதிகரிப்பதற்கு உணவு தவிர்ந்த ஏனைய காரணிகளின் பங்களிப்பு பின்வருமாறு இருக்கிறது.

1. பரம்பரை அம்சங்கள் 15 சதவிகிதம்,
2. அதிகரித்த எடை 12 சதவிகிதம்,
3. ஹோர்மோன்களும் நொதியங்களும் 8 சதவிகிதம்,
4. உயர் இரத்த அழுத்தம் 8 சதவிகிதம்,
5. அதிக மது பாவனை 2 சதவிகிதம்,
6. மனப்பளுவும், உணர்ச்சி நிலைகள், சமூக பொருளாதார நிலையும் 8 சதவிகிதம்,
7. நீரிழிவு 7 சதவிகிதம்,
8. உடலுழைப்பற்ற வாழ்க்கை முறை 6 சதவிகிதம்,
9. புகைத்தலும், சூழல் மாசுக்களும் 6 சதவிகிதம்,
10. ஆணா பெண்ணா என்பது, வயது அதிகரிப்பு, சிலவகை மருந்துகள், போன்ற ஏனைய பல காரணிகள் 5 சதவிகிதம் எனச் சொல்லப்படுகிறது.

பரம்பரை அம்சத்தின் பங்கு

இவற்றில் மிக உயர்ந்த அளவான 25 சதவிகிதத்தைக் கொண்டிருப்பது உணவுமுறைகளே. எனவே எமது குருதியில் கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிப்பிற்கு மிக முக்கிய காரணம் தவறான உணவுமுறைகள்தான் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதற்கு அடுத்து இருப்பது பரம்பரை அம்சங்களாகும். இது 15 சதவிகிதம் வரை கொலஸ்டரோல் அதிகரிப்பிற்குக் காரணமாக இருக்கிறது.

மேற் கூறிய நோயாளி எவ்வளவு கவனமாக இருந்தும் கொலஸ்ட்ரோல் அதிகரித்ததற்குக் காரணம் அவரது தாயாருக்கும் கொலஸ்டரோல் இருந்ததாகக் கொள்ளலாம்.

கொலஸ்ட்ரோல் அதிகரிப்பிற்கு மாத்திரமின்றி நீரழிவு, பிரஸர், மாரடைப்பு, ஒஸ்டியோபொரோசிஸ், சில வகை புற்றுநோய்கள் போன்ற பல்வேறு நோய்களுக்கும் பரம்பரை அம்சங்கள் காரணமாகின்றன. ஒருவரது தாய், தகப்பன், சகோதரங்கள் போன்ற நெருங்கிய உறவினர்களில் அவ்வாறான நோய்கள் இருந்தால் இவர்களுக்கும் வருவதற்கான சாத்தியம் அதிகமாகும்.

மருந்துகளை நிறுத்தல் மற்றொருவருக்-கும் கொலஸ்ட்ரோல் இருந்தது. மருந்துகள் சாப்பிட்டார். மூன்று மாதங்களுக்குப் பின்னர் கொலஸ்டரோல் ரிப்போட்டுடன் வந்தார்.
"உங்கள் கொலஸ்டரோல் அளவு சாதாரண நிலைக்கு வந்துவிட்டது" என்றேன்.
முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது.
"அப்ப மருந்தை நிப்பாட்டலாம்தானே" எனக் கேட்டார்.
"உணவு முறைகளைச் சரியாகக் கடைப்பிடித்ததுடன், உங்களால் கட்டுப்படுத்தக் கூடிய ஏனைய வாழ்க்கை முறைகளான தினசரி உடற் பயிற்சி, நாற்காலியில் உட்கார்ந்திருப்பது போலன்றி உடல் உழைப்புடன் கூடிய வாழ்க்கை, மது புகைத்தல் ஆகியவற்றை நிறுத்தல், நீரிழிவு பிரஸர் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல், மனஅமைதியான வாழ்க்கை முறை

என வாழ்ந்தால் கொலஸ்டரோல் தானே குறைவதற்கான சாத்தியம் உள்ளது. ஆனால் அது முக்கியமாக ஆரம்ப நிலையில் மாத்திரமே சாத்தியமாகும். ஆனால் உங்கள் வயதையோ, நீங்கள் ஆணா பெண்ணா என்பதையோ மாற்ற முடியுமா? அதேபோல உடலிலுள்ள ஹோர்மோன்களையும் நொதியங்களையும் உங்களால் மாற்ற முடியாது. வேறு நோய்களுக்கான எல்லா மருந்துகளையும் நிறுத்த முடியுமா? அவ்வாறு செய்தால் கொலஸ்டரோலை மருந்துகள் இன்றிக் குறைக்க வாய்ப்பு உள்ளது" என்ற விளக்கத்தை அளித்தேன்.

"ஒரு ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர வேறு எதையும் செய்யக் கூடிய அதிகாரம் எனக்கு இருக்கிறது" என்று கூறியவர் மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா. ஆனால் அவராலும் அவரது வயதையோ, முதுமையையோ, மரணத்தையோ மாற்ற முடியவில்லை. இவற்றுடன் பரம்பரை

(33ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20வது ஆண்டு பூர்த்தி விழா

வணக்கத்துக்குரிய மதகுருமார்களுக்கும் தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திருச்செல்வம் அவர்களுக்கும் அவரது துணைவியார் றஞ்சி திரு அவர்களுக்கும் விருதுகள் பெற இருப்பவர்கள் மற்றும் அவையில் இருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

முதன்மை ஆசிரியர் என்னை கொஞ்சம் பேச வேண்டும் என்று கூறியிருந்தார். கொஞ்சம் பேச நிறையவே சிந்திக்க வேண்டியதாயிற்று. தமிழருக்கு பெருமை தரும் வகையில் தமிழர் தகவலை கடந்த இரு தசாப்தங்களாக "அகிலன் அசோஷியேற்ஸ்" மூலம் வெளியிட்டு வரும், முதன்மை ஆசிரியர் பத்திரிகை வித்தகர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்களையும் அவரது ஆற்றல் மிகு அன்புத் துணைவி, இணை ஆசிரியர் றஞ்சி திரு அவர்களையும், தமிழர் தகவல் குடும்பத்தைச் சார்ந்த கலைஞர்கள், தொண்டர்கள், வர்த்தகர்கள், எழுத்தாளர்கள், விருது பெற்றவர்கள், விருது பெற இருப்பவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



தலைமையுரை

'சமூகப்பணியாளர்'
கதிர் துரைசிங்கம்

தகவல் நெடுஞ்சாலையில் தமிழர் தகவலின் ஒட்டகப் பயணத்தின் நான்காவது ஆண்டில் நானும் இணைந்து கொண்டேன். நேரக் கட்டுப்பாடு, நிர்வாகத்திறன், நியமம் முதலியவற்றிற்கு தமிழர் தகவல் விழாக்கள் எடுத்துக்காட்டாக விளங்குவது உங்களுக்குத் தெரிந்ததே. மேலும் வாழும் போது கௌரவிக்கும் இலட்சியத்தையும், விருது வழங்கும் வைபவத்தையும் கனடாவில் ஆரம்பித்தவர் திரு அவர்கள் தான்.

சஞ்சிகை ஒன்று மாதா மாதம் தொடர்ந்து நியமம் தவறாது இருபது வருடங்களாக இலவசமாக வெளிவருவது மாபெரும் சாதனை. இந்த சாதனைக்குத் தேவையான திட்டமிடல், திறமை, தீவிர உழைப்பு, துணிவு, வைராக்கியம் எல்லாமே திருவுடன் ஒன்றிய செல்வங்கள், தமிழர் தகவல் பல்வேறு துறை சார்ந்தவர்களை விருது வழங்கி கௌரவித்து வருகிறது. கனடாவில் வாழும் தமிழர்கள், பிற நாடுகளில் வாழும் தமிழர்கள், வேற்று இனத்தவர்கள், நிறுவனங்கள், அமைப்புகள் என்று பல தரப்பட்டவர்கள் தமிழர் தகவல் விருதுகளைப் பெற்று இருக்கிறார்கள்

ஆண்டு மலருடன், ஆண்டுதோறும் நடக்கும் விருது வழங்கும் வைபவத்துடன் நின்று விடாமல் தமிழர் தகவல் நடத்திவரும் கனடாதின வைபவத்திலும், வேறு வைபவங்களிலும் பல பேரை திரு அவர்கள் கௌரவித்து வருகிறார்கள். மேலும் தமிழர் தகவல் நிலையத்தின் சிபாரிசில் ஒன்ராறியோ அரசின் தொண்டர் சேவை விருதினை பலர் பெற்று வருகிறார்கள்.

தமிழர் தகவல் 1991ல் ஆரம்பித்த பொழுது அதன் முக்கிய பணி அகதிநிலை கோரும் தமிழர்களுக்கு வழிகாட்டுவதாக அமைந்தது. பின்னர் குழுக்களின் வன்முறை, பிள்ளை வளர்ப்பு, வேலை வாய்ப்பு, கனடாவில் கல்விமுறை, தமிழ்க் கல்வி, கணினி, சட்டம், வர்த்தகம், அறிவியல், குடும்ப உறவு, தாயக செய்திகள், தேவைகள், ஈழப் போராட்டம், புனருத்தாரணம், தமிழர்கள் கனடாவில் 25 ஆண்டுகள், நாடு கடந்த அரசியல் என்று வியாபித்து தேவைக்கேற்ப தன் பாணியை மாற்றி பணி செய்து வருகிறது.

இத்தகைய பதிவுகள் வரலாறாகும். தமிழர் தகவல் மூலம் தான் வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடிய தமிழர்களின் இலக்கிய மற்றும் கலை நிகழ்ச்சிகளின் தகவல்களை அறிந்து வருகிறார்கள். இலங்கையில் சில பல்கலைக்கழக மாணவவர்கள் தமிழர் தகவல் ஆண்டு மலர்களை உசாத்துணை நூல்களாக கொண்டு எமது கலை இலக்கிய முயற்சிகளை மதிப்பீடு செய்து வருகிறார்களென்றும் நான் அறிந்து இருக்கிறேன். இன்னும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் திரு அவர்கள் பலரை இங்கு எழுத்தாளர்கள் ஆக்கியிருக்கிறார்.

பலருடன் இணைந்து, பலரையும் இணைத்து இன்னும் பல தசாப்தங்கள் தமிழர் தகவல் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

தமிழர் தகவல் பல தகவல்களை உங்களுக்குத் தருவதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் எல்லாத் தகவல்களும் கிடைக்க வேண்டிய நேரத்திற்கு கிடைப்பதில்லை என்பது சிலருக்குத்தான் தெரியும். இன்று விருது பெறுபவர்கள் யாரென்பது இங்கு வந்த பின் தான் உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். 1992ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் விருது பெறுபவர்களின் பட்டியல் சிதம்பர இரகசியமாக, இல்லை... இல்லை ஒஸ்கார் இரகசியமாக பேணப்பட்டு வருவது ஒரு தனிச்சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் புலம்பெயர் தமிழர் மத்தியில் அந்நியப்பட்டு வருகிறதா?

இதுவரை, புலம்பெயர் தமிழ்த் தேசிய தளங்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தற்போது, அதில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை வெளியேற்றும் முடிவை எடுத்துள்ளதாக அதன் அவைத் தலைவராக அறிமுகப்படுத்தியுள்ள திரு. பொன் பால்ராஜன் அவர்கள் ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

அவரது இந்த அறிவித்தல், புலம்பெயர் தமிழீழ மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. இந்த அறிவித்தலின் பின்னர், லண்டனில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றை மக்கள் புறக்கணித்து அதிர்ச்சி வைத்தியம் செய்துள்ளனர்.

கடந்தமாதம் துவிச்சக்கர வண்டிப் பிரச்சாரம் ஒன்றை லண்டனில் மேற்கொண்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மாவீரர், முன்னாள் போராளிகள் குடும்ப நலம் பேணும் அமைச்சராக அறிவிக்கப்பட்ட திரு. உருத்திராபதி சேகர் அவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டு, வடமேற்கு லண்டனில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் 11 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். இவர்களில், 5 பேர் பிரித்தானிய தமிழர் பேரவை சார்பாகக் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. கே.பி. அவர்களால் முன்மொழியப்பட்டதாக இருந்தாலும், முள்ளிவாய்க்-காலின் பின்னர் உலகளாவிய ஜனநாயகக் கட்டமைப்பின் அவசியத்தை உணர்ந்து கொண்ட தமிழ்த் தேசியவாதிகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்- கத்தை வரவேற்றதுடன், அதில் இணைந்து செயலாற்றவும் விரும்பினார்கள்.

ஆனால், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக கே.பி. குழுவினர் மேற்கொண்ட தொடர் அராஜகம் காரணமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் முழுமையாக இணைந்து பணியாற்றும் தமிழ்த் தேசியவாதிகளது எண்ணம் வீணாகிப் போனது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான தளமாக அமைத்துக்கொள்ள விரும்பிய தமிழ்த் தேசியவாதிகளின் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில், தமிழ்த் தேசியவாதிகள் இரண்டாவது அமர்விலிருந்து வெளிநடப்புச் செய்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இதன் பின்னர் தொடர்ந்த அவை நடவடிக்கையின்போது மிகக் குறைந்த அங்கத்தவர்களே அவையில் இருந்த காரணத்தினால், அங்கு நிறைவேற்றப்பட வேண்டிய அரசியல் யாப்பு விவாதத்திற்கோ, அங்கீகாரத்துக்கோ விடப்படவில்லை.

ஆனாலும், தமது கைப்பிடி நழுவிவிடக் கூடாது என்ற கே.பி. குழுவினரால் அந்த அவையில் யாப்பு நிறைவேற்றப்பட்டதாக பொய்யான அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இது குறித்து, தமிழ்த் தேசியவாதிகளால் மதியுரைஞர் குழுவிடம் மேற்கொண்ட முறைப்பாட்டின் காரணமாக, அன்றைய நிகழ்ச்சிக் காணொளிப் பதிவைப் பல தடவைகள் போட்டுப் பார்த்து, தமிழ்த் தேசியவாதிகளின் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர்.

மோசடியான தமது வார்த்தைகளை நியாயப்படுத்தும் விதமாக, மக்கள் பிர-திநிதிகள் அனைவரிடமும் அவையில் அங்கீகாரம் பெறாத யாப்பு மீது பதவிப் பிரமாணம் கோரப்பட்டது. இதனை, தமிழ்த் தேசியவாதிகள் முற்றாக நிராகரித்ததுடன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை தொடர்ந்தும் பிழையான பாதையில் செல்வதை அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்தனர்.

இதன்படி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான தேர்தல் நடைபெற்றது முதல் இதுவரை நடைபெற்ற முறைகேடுகள், ஜனநாயக விரோத செயற்பாடுகள் தொடர்பாக, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமராகப் பதவி ஏற்றுள்ள திரு. ருத்திரகுமாரன் அவர்களுக்கு 10 அம்சக் கோரிக்கைகள் கொண்ட கடிதம் ஒன்று 17-02-2011 அன்று தமிழ்த் தேசியவாதிகளால் அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிப்பதற்காக திரு. ருத்திரகுமாரன் அவர்களுக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், தங்களது பிழைகளும். ஜனநாயக விரோத செயற்பாடுகளும் தமிழ்த் தேசியவாதிகளால் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக, தம்மோடு இணைந்து பணியாற்ற மறுத்து, தமிழீழ விடுதலையை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்த் தேசியவாதிகளை, போலியான காரணம் ஒன்றினூடாக வெளியேற்றும் முயற்சி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அவைத் தலைவராக அறிமுகப்- படுத்திக்கொண்ட திரு. பொன். பால்ராஜன் அவர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்துவரும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் இந்த அறிவிப்பு மாறான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான அரசியல் கள நிலைகளுக்கு இசைவாக, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை தமிழீழ விடுதலைக்கான தளமாக உருவாகும் என்ற புலம்பெயர் தமிழர்களின் எண்ணங்களில் விழுந்த அடியாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைவதால், அந்தத் தளம் மக்களால் புறக்கணிக்கப்படும் அபாயத்தில் உள்ளதையே அண்மைக்கால நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. காலம் நமக்குக் கொடுத்துள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, எமது மண்ணையும், மக்களையும் மீட்டெடுக்கும் போராட்-டத்தை நாம் அனைவரும் இணைந்தே மேற்கொள்வது அவச-ியமான தருணத்தில், சிங்கள தேசத்தின் விருப்பங்களுக்கு இசைவாக மக்களைப் பிளவு படுத்துவதும், புலம்பெயர் விடுதலைத் தளங்களைச் சிதைப்பதற்கான புதிய தளங்களை

(33ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# பேன் பொறுக்கிகள்

நண்பர் அவசரமாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். யாரோ துரத்துகிறார்கள் என்று நான் நினைத்தேன். தலைமுடி சீவாமல் பறந்தது. முகம் வியர்த்துக் கிடந்தது. வணக்கம் சொல்லவில்லை. கோட்டை கழற்றவில்லை. நீலமேனி நெடியோன் போல எனக்கு முன்னே உயரமாக நின்றார். பெட்டியிலே வந்த புது சேர்ட்டில் இரண்டு கைகளையும் பின்னுக்கு மடித்து ஊசி குத்தியிருப்பார்கள். அதுபோல கைக-ளைப் பின்னால் கட்டிக்கொண்டு நான் முதலில் வணக்கம் சொல்லவேண்டும் என எதிர்பார்த்து நின்றார். நான் உட்காருங்கள் என்று சொல்ல முன்னரே உட்கார்ந்து 'நீங்கள் நம்ப மாட்டீர்கள்' என்றார். 'முயற்சி பண்ணிப் பார்க்கிறேன். சொல்லுங்கள்' என்றேன். 'தலைமையாசிரியரிடம் இருந்து மறுபடியும் கடிதம் வந்திருக்கிறது' என்றார்.

நண்பர் நடுத்தர வயதுக்காரர். அமெரிக்காவின் வங்கி ஒன்றில் உயர் பதவி வகிக்கிறார். அவருடைய மூன்று மகள்களும் பிரபலமான தனியார் பள்ளிக்கூடம் ஒன்றில் படித்தார்கள். அவர் மாதாமாதம் கட்டும் வீட்டுக் கடனிலும் பார்க்க மூன்று மகள்களின் படிப்புச் செலவுக்கு அவர் கட்டும் பணம் அதிகம் என்று சொல்லியிருந்தார். அந்தப் பள்ளிக்கூடம் எப்ப பார்த்தாலும் அதற்கு இதற்கு என்று அவரிடம் பணம் கேட்டுக்கொண்டே இருந்தது.

'பள்ளிக்கூடக் கட்டணத்தை கூட்டிவிட்டார்களா?' என்று கேட்டேன். 'இல்லை, அதனிலும் மோசம்' என்றார். 'என்னுடைய மகள்களின் தலையில் பேன் பிடித்திருக்கிறது என்று சொல்லி தலைமையாசிரியர் முறைப்பாடு கொடுத்திருக்கிறார். என்னுடைய மகள்கள் தலையில் பேன் கிடையாது. யாரோ ஒரு பிள்ளை கொண்டுவந்து மற்றவர்களுக்கும் கொடுத்துவிடுகிறது' என்றார். 'அப்படி தலைமையாசிரியருக்கு சொல்ல வேண்டியதுதானே?' அவர் சொல்கிறார் 'எல்லா பெற்றோர்களும் அதையேதான் சொல்கிறார்கள். நீங்கள் ஒத்துழைக்கவேண்டும். அது இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது.'

'என்ன செய்தீர்கள்?

'இனித்தான் அதிசயம். உங்கள் தலையில் பேன் பார்ப்பதற்கென்று ஒரு கம்பனி இருக்கிறது, தெரியுமா? அவர்கள் ஓர் இணையதளம் கூட வைத்திருக்கிறார்கள்.'
'இணையதளமா?'

'மீதியையும் கேளுங்கள். ஒரு பிள்ளைக்கு வீட்டிலே வந்து பேன் பார்க்க கட்டணம் 200 டொலர். எனக்கு மூன்று பிள்ளைகள் என்றபடியால் 100 டொலர் கழிவு தந்தார்கள். ஒருநாள் முழுக்க பேன் பார்த்தார்கள். நான் அவர்களுக்கு 500 டொலர் கொடுத்தேன்.'

'பள்ளிக்கூட தலைமையாசிரியரை பிழை சொல்ல முடியாது. பிள்ளைகளையும் பிழை சொல்ல முடியாது. பேனையும் பிழை சொல்ல முடியாது. பெற்றோருடைய கவனக்குறைவுதான் இதற்கு காரணம்' என்றேன். நண்பருக்கு நான் சொன்னது அவ்வளவு பிடிக்கவில்லை.

இது நடந்தது மூன்று மாதத்துக்கு முன்னர். இரண்டு நாள் முன்பு மறுபடியும் நண்பர் வந்தார். அவர் கையில் தலைமையாசிரியர் எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. 'பாருங்கள், இன்னொரு கடிதம் வந்திருக்கிறது. நான் என்ன பேன் பண்ணை ஒன்று நடத்தி பேன் உற்பத்தி செய்கிறேனா? யாரோ பிள்ளை பேனை பள்ளிக்கு கொண்டு வருகிறது. நாங்கள்தான் அவஸ்தைப்பட வேண்டும்.'

'கடிதம் என்ன சொல்கிறது?' என்று கேட்டேன்.

'அதேதான். ஆனால் இம்முறை ஓர் எச்சரிக்கையும் இருக்கிறது. யாராவது பிள்ளையின் தலையில் இனிமேல் பேன் காணப்படுமானால் அந்தப் பிள்ளையை இரண்டு வாரம் பள்ளியிலிருந்து நிறுத்திவிடுவார்களாம். நம்பமுடிகிறதா?'

'என்ன செய்தீர்கள்?'

'மறுபடியும் பேன் பொறுக்கிகளைக் கூப்பிட்டேன். அவர்கள் உண்மையான பொறுக்கிகள்தான். இம்முறை 100 டொலர் கழிவு தர மறுத்துவிட்டார்கள். இப்பொழுதுதான் அவர்களுக்கு 600 டொலர் செக் ஒன்றை கொடுத்துவிட்டு வருகிறேன். போகிறபோக்கை பார்த்தால் பள்ளிக்கூட கட்டணத்தைவிட பேன் செலவு கூடிவிடும்போல தெரிகிறது.'

'இது என்ன தேசிய ரகஸ்யமா? நீங்களே பேன் பார்க்கலாம். உங்கள் பிள்ளைகளும் ஒருவர் தலையை ஒருவர் சோதிக்கலாம். 'நான் பாரதிராஜாவின் திரைப்படம் ஒன்றை நினைத்துக்கொண்டேன். அதிலே மூன்று பெண்கள் நிரையாக இருந்து ஒருவருக்கொருவர் பேன் பார்ப்பார்கள்.

'செய்யலாம்தான், ஆனால் ஒரு பேனைத் தவறவிட்டாலும் அவர்கள் என் மகளை இரண்டு வாரகாலம் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்திவிடுவார்கள். நான் தினம் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். அப்படி நிறுத்தினால் நானும் அல்லவா இரண்டு வாரகாலம் விடுப்பு எடுக்க வேண்டி வரும்.'

'பேனை ஒழிக்க வேறு வழியே கிடையாதா?'

'எப்படி ஒழிக்கிறது? ஒரு பேன் செத்தால் அதன் செத்த வீட்டுக்கு இருபது பேன் அல்லவோ வருகிறது.'
'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'

'இந்த வருடம், இந்த தேதி, இந்த நேரத்தை உங்கள் டையரியில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நான் பேன் பொறுக்கிகளைத்தான் சந்தேகிக்கிறேன். அவர்கள் ஒரு பிள்ளைமூலம் பள்ளிக்கூடத்துக்கு பேனை ஏற்றுமதி செய்யலாம் அல்லவா? இது எவ்வளவு லாபகரமான தொழில்.' நான் திகைத்துப் போய் நின்றேன்.

'இனி என்ன செய்யப் போகிறீர்கள்?'

நீலமேனி நெடியோன் வீட்டிலேயிருந்து கொண்டுவந்த நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியே விட்டார்.

'அடுத்த கடிதத்துக்காக காத்திருக்கப் போகிறேன்' என்றார்.
[இதை ஒருவருமே நம்ப மாட்டீர்கள் என்பது தெரியும். அதுதான் கீழே கொழுவியை கொடுத்திருக்கிறேன்.] ●
http://www.thenit-picker.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# பெங் சூயி

தமிழிலும் தமிழரிடமும் பெயர் பெறாதவை பல இன்னமும் உலகை சுற்றுகின்றன. சுனாமி கூட தமிழீழ மண்ணைத் தொட்ட பின்பே ஆழிப்பேரலையாக மீண்டது உலக வரலாறு.

கனடாவில் தற்பொழுது முன்னணிக்கு வந்து கொண்டிருப்பது பெங் சூயி என்ற சீன வாஸ்து சாத்திரமாகும். இந்த திடீர் பிரபலத்துக்குக் காரணமும் உண்டு. இங்கிலாந்து இளவரசர் வில்லியத்திற்கும் அவரது காதலி கேத் மிடில்டனுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெறும் என்று அதற்கு முன்பாகவே அது கணித்திருந்ததாம்.

பெங் சூயி என்றால் என்ன என்று சீன மொழி தெரிந்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள். காற்றும் நீரும் என அதற்கு அர்த்தம் சொல்வார்கள். காற்றும் நீரும் தான் வாழ்வின் வளத்தை அதிகரிக்கும் அல்லது அபகரிக்கும் என விளக்கம் வேறு சொல்வார்கள்.

அந்த ஒடுங்கிய கண்களின் இடுக்கினில் அப்பொழுது தெரியும் பிரகாசத்தில் அவர்களின் வார்த்தைக்கான ஓர் உத்தரவாதம் தெரியும்.

பெங் சூயி – நம்புபவர்களுக்கு அதிர்ஷ்டம்! நம்பாதவர்களுக்கு அதிர்ஷ்டமில்லை! மனிதருக்குள் உள்ள மேம்பாடான மனித சக்தியை வெளிக்கொணர பத்து அடையாளச் சின்னங்கள் முக்கிய பங்காற்றுவதாக பெங் சூயி கருதுகின்றது.

அதனால்தான் சிரிக்கும் புத்தர் செல்வம் கொழிக்கும் என்ற நம்பிக்கையுடன் பல தமிழ் வீடுகளில் நுழைந்தார். சந்தான விருத்தி போசனம் என ஆறு வகை புத்தர்கள் சிறப்பானவர்கள். அதிர்ஷ்ட தேவர்கள் ஆரோக்கியம் செல்வம் ஆயுள் குதூகலம் அருள்வார்களாம். தமிழரின் பார்வையில் தேவர்கள் இன்னும் அகப்படவில்லை. அல்லது தேவர்கள் தமிழரிடம் சிக்கவில்லை.

ஜோடித் தாராக்கள் வீட்டிற்குள் படமாகவோ சிலைகளாகவோ வந்தால் வீட்டினுள் அன்னியோன்னியமும் வரும். அதே போல சீனத்துப் புறாக்கள் குடும்பத்தில் சச்சரவுகளை குறைத்து மகிழ்ச்சியைப் பெருக்கும். பீனிக்ஸ் பறவை நீண்ட ஆயுளையும் வருங்காலத்தைக் கூர்ந்தறியும் ஆற்றலை அதிகரிக்கும். அதிர்ஷ்ட ஆமையும் ஒற்றைக் கொம்புக்குதிரையும் ஆயுளை வலுப்படுத்த மூன்று கால் தவளையும் மூன்று செப்பு நாணயங்களும் ஏழு நிற பிரமிட்டுகளும் வாழ்வை வளப்படுத்தும்.

பெங் சூயி பற்றி தெரிந்தோ தெரியாமலோ தமிழர்கள் சில சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கின்றனர். பிரதான வாசலைத் திறந்தவுடன் மாடிப்படிகள் இருப்பின் ஐந்து குழல் கொண்ட குழல் மணியை(wind chime) வாசலின் பின்புறம் நன்மை தரும் என்ற நம்பிக்கையில் கட்டிவிடுகின்றனர். பிரதான வாசலின் வெளியேயும் உள்ளேயும் சப்பாத்து செருப்பு வைப்பதை தவிர்க்கின்றனர்.

பிரதான வாசலின் அருகே குளியலறை கழிவறை இருக்காதவாறு கவனிக்கின்றனர். பிரதான வாசலின் அருகே ஒருபொழுதும் வெற்றுப் பாத்திரத்தை வைப்பதில்லை. பிரதான வாசலுக்கும் ஜன்னல்களுக்கும் புறமுதுகு காட்டி உட்கார்ந்திருப்பதில்லை. சமையலறைக்குள் குளிர் சாதனப்பெட்டியும் அடுப்பும் நேரெதிராக அமைப்பதில்லை. படுக்கை அறையில் தொலைக்காட்சிப்பெட்டி வைக்கக் கூடாது. கட்டிலுக்கு பின்புறமோ அல்லது பக்கவாட்டிலோ நிலைக்கண்ணாடி பொருத்தக்கூடாது என்பதை தெரிந்து வைத்துள்ளார்கள்.

2011 யூலை மாதம் 5 வெள்ளிக்கிழமைகள் 5 சனிக்கிழமைகள் 5 ஞாயிற்றுக்கிழமைகள் வருகின்றன. 823 வருடங்களுக்கு ஒரு முறைதான் இப்படி வருவதுண்டாம். இதனை பணப்பை என்று பெங் சூயி கூறுவதாக நண்பர்களுக்கு தெரியப்படுத்துபவர்களின் விட்டில் கண்கள் நம்பி மூளை உறுதி செய்வதற்குள் சுபீட்சம் நிலைக்கும் என்பது - ஓர் உருவகக்கதை!

பெங் சூயி தமிழில் பெயர் பெறப்போவது அதிக தூரத்தில் இல்லை! ●

## கனடிய ஒரு சதம் மறையப் போகிறது

'பென்னி' என்று சொல்லப்படும் கனடிய ஒரு சதக் குற்றித் தயாரிப்பை நிறுத்துவதற்கு கனடிய அரசு ஆலோசித்து வருகின்றது.

இந்த 'பென்னி'த் தயாரிப்புக்கு அதன் பெறுமதியிலும் கூடிய தொகை செலவாகின்றது. அதேசமயம், அதன் பாவனையும் குறைந்து வருவதால், அடிக்கடி பொருந்தொகை 'பென்னி'யைத் தாயரிக்க நேருகின்றது. பெரும்பான்மையானவர்கள் வர்த்தக நிறுவனங்களில் மிகுதிப் பணமாக ஒரு சதம் வரும்போது அதனைப் பெறுவதில் நாட்டம் கொள்வதில்லை.

சிலர் ஒரு சதக் குற்றியை மீன் தொட்டிகளிலும் தடாகங்களிலும் வீசுகின்றனர். மற்றொரு தொகையினர் தங்களின் வீடுகளிலும் அலுவலகங்களிலும் கண்ணாடிக் கூஜாக்களில் அவைகளைப் போட்டு நிரப்பி அழகு பார்க்கின்றனர்.

## மே மாதத்தில் குடிசனக் கணக்கெடுப்பு

கனடாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் சனத்தொகைக் கணக்கெடுப்பு இந்த வருடம் மே மாதத்தில் நடைபெறவுள்ளது. மே மாதம் பத்தாம் திகதியை சனத்தொகைக் கணக்கெடுப்பு நாளாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட நீண்ட படிவம் இம்முறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய சனத்தொகை 1.15 பில்லியன்

இந்தியாவின் கடந்த வருட சனத்தொகை 1.15 பில்லியன். சீனாவுக்கு அடுத்ததாக இந்தியா இரண்டாவது இடத்தில் தற்போது நிற்கின்றது. ஆனால் 2030ஆம் ஆண்டில் இந்தியாவே சனத்தொகையில் முதலிடத்தில் நிற்குமென்றும், அப்போது இந்திய சனத்தொகை 1.53 பில்லியனாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய குடிவரவாளர் இணக்க வாழ்வில் கனடாவுக்கு 3வது இடம்

புதிய குடிவரவாளர்கள் புகுந்த நாட்டில் இணைந்து வாழுவதில் உலக நாடுகளில் கனடா மூன்றாவது இடத்தை வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி கற்பதற்கான வசதிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற விடயங்களின் அடிப்படையில் முதலாவது இடத்தை சுவீடனும், இரண்டாவது இடத்தை போர்த்துக்கலும் பெற்றுள்ளன.

கனடா மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளதாயினும், குடியேறிய சகலருக்கும் வாக்களிக்கும் உரிமை மறுக்கபடுவது முக்கியமான ஒரு குறையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவில் ஒருவர் பிரஜாவுரிமை (citizenship) பெற்ற பின்னரே தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையைப் பெறுகின்றனர்.

சில ஐரோப்பிய நாடுகளில், புதிய குடிவரவாளர்கள் அவர்கள் அகதிகளாக இருக்கும்போதே ஒரு வரியிறுப்பாளர் என்னும் தகுதியின் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் லண்டனைத் தளமாகக் கொண்ட பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் புருசல்ஸ் குடிப்பெயர்வு கொள்கைத் திட்ட அமைப்பு ஆகியன இணைந்து இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளன.

வெளிநாடுகளில் குடும்பங்கள் மீள இணைதல், கல்வித் தராதரம், நிரந்தர வசிப்பிட உரிமைக்கான வாய்ப்புகள், ஆசியலில் பங்களித்தல், பிரஜாவுரிமை பெறுவது, மற்றும் சமத்துவ சட்டங்கள் போன்ற விடயங்கள் இந்த அறிக்கை தயாரிப்பில் கவனிக்கப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டுக் கணிப்பில் ஐந்தாமிடத்திலிருந்த கனடா, இப்போது 89 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளது. ஆனால், புதிய குடிவரவாளர்களுக்கு அரசியல் பங்கேற்றலில் இடமளிக்காத குறையினால், அந்த விடயத்தில் 38 புள்ளிகளை மட்டும் பெற்று 18ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.



பொன்னையா விவேகானந்தன்

## ஊரார் உயிரூட்டிய கல்வி

12

'பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது ஆன்றோர் வாக்கு. அக்காலத் தமிழர் சமுதாயம், கல்விக்கான உயர் சிறப்பினை வழங்கியிருந்தது. அறிவு மிக்கதோர் ஆசானைத் தேர்ந்தெடுத்து, அவர் வாயிலாக வேண்டிய அறிவினைப் பெற்றுக்கொள்ளும் கல்விமுறை அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது.

திண்ணைக் கல்வி என அழைக்கப்பட்ட கற்பித்தல் முறைமை அக்கால வழக்கத்திற்குரிய ஒன்று. கற்றுக் கொடுக்கும் ஆன்றோர் ஒருவரின் வீட்டுத் திண்ணையில் வகுப்புகள் நடக்கும். மாணாக்கர் பலர், அந்த ஆன்றோரின் இல்லத்தில் தங்கியிருந்து, அவருக்கான பணிவிடைகளைப் புரிந்து, பாடங்களைக் கற்றனர்.

வேறு சில ஆன்றோர், மரங்களுக்குக் கீழும், பொது மண்டபங்களிலும் கற்றுக் கொடுத்தனர். பயில்கின்ற மாணாக்கர் கல்வி கற்பதற்காக, பல ஊர்களிலும் இருந்து வந்தவர்களாக இருந்தனர். இப்போதிருப்பதைப் போன்ற விடுதிகள் அக்காலத்தில் இல்லை. பொது இடங்களில் தங்கியிருந்தே கல்வியைத் தொடர்ந்தனர். பொருளாதார மேம்பாடு இல்லாத அக் காலச் சமூகத்தில் இவ்வாறு கல்வியைத் தொடர்வோர் பல இன்னல்களை எதிர் கொண்டனர்.

'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பார்கள். கல்வியிலே ஆர்வம் கொண்ட மாணவரின் உணவுத் தேவை, பெருந்தேவையாக இருந்தது. ஆனாலும் இத் தேவை எந்த சிரமங்களும் இன்றி, நிறைவேற்றப்பட்டது. எந்த ஊரில் தங்கியிருந்து, கல்வி பயின்றனரோ, அந்த ஊரைச் சார்ந்த மக்கள், மாணவருக்கான உணவை வழங்கினர்.

மாணவருக்குக் கற்பதே கடமை. உணவு தேடும் முயற்சிக்காகத் தொழில் செய்ய முற்பட்டால், கல்வியில் கவனம் குறைந்துவிடும். தம் சமூகத்தின் கல்வியில் அக்கறை கொண்ட ஊரார் அவர்களுக்கான உணவை வழங்கும் பொறுப்பை, தாமே ஏற்றுக் கொண்டனர். கல்விக்கு உணவூட்டி, உயிர் வழங்கி பெருமையுற்றனர் ஊரார்.

பசிக்கின்ற போதெல்லாம், மாணாக்கர் வீடு வீடாகச் செல்வர். ஊராரும் உவப்போடு உணவை வழங்குவர். ஊரார், உணவை வழங்கிய போதும், மாணவர் மெலிந்து காணப்பட்டனராம். கல்வியிலே அதிக அக்கறை கொண்டு பயிலும் இந்த மாணவர்கள், உணவில் நாட்டம் கொள்ளாது பயின்றனாரம். ஆதலால் உடல் நலிவுற்றதாம் என இலக்கிய ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பயில்கின்ற மாணவர், பலவற்றையும் கற்கும் நோக்கத்தோடு, ஊர்ஊராகச் சென்றனர். புதிய புதிய விடயங்களைத் தேடிக் கற்றனர். இத்தகைய மாணக்கரை அக்காலத்தில் ஊரார் போற்றினர் என்ற செய்திகளும் உண்டு.

தன் வீட்டுக்கு உணவு கேட்டு வந்த ஒரு இசை மாணாக்கனைப் பார்த்துக் கூறுவதாக இக் குறுந்தொகைப் பாடல் அமைகின்றது.

அன்னாய், இவன் ஓர் இள மாணாக்கன்....
இரந்தூண் நிரம்பா மேனியோடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே. குறுந்தொகை 33 - மோசிகீரனார்.

தமிழ்ச் சமுதாயம், கற்றோரையும், கல்வியையும் போற்றி வாழ்ந்த பெருமைக்குரியது. ஆளுவோர் கற்றோரைப் போற்றினர். கற்றோர் தம் அறிவால் வேந்தரையும், மக்களையும் வழிநடத்தினர். ஆதலாற்றான், பழங்காலச் சமுதாயம் இன்றும் போற்றப்படுகின்றது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்காபரோவிலும், எற்றோபிக்கோவிலும்

# தேசிய அன்னைக்கு நினைவு வணக்கம்









அமரத்துவ மாது, தேசிய அன்னை வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை அம்மா அவர்களின் நினைவு வணக்கக் கூட்டங்கள் ரொறன்ரோ பெருநகரில் ஸ்காபரோவிலும், எற்றோபிக்கோவிலும் கடந்த மாதம் 20, 21ஆம் திகதிகளில் நடைபெற்றது. பெருமளவிலான பொதுமக்கள் இரண்டு நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர். மலர் வணக்கம் செலுத்துவதற்காக தேசிய உணர்வு மக்கள் நீண்ட வரிசையில்



(ஒளிப்படங்கள் கோகுலன்)

காத்து நின்றனர். தமிழ் மகளிர் அவை, தமிழ் இளையோர் அமைப்பு ஆகியவை மற்றும் பல்வேறு பொது அமைப்புகளுடன் இணைந்து இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். கனடியத் தமிழர் தேசிய அவை, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உட்படப் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் இங்கு உரையாற்றினர். மொன்றியல் நகரிலும் தேசிய அன்னைக்கான நினைவு வணக்க நிகழ்வு நடத்தப்பட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினியன்

# ஆன்மீக வழியில் அன்னை மண் மீட்போம்!

காத்து வந்தெம் விடுதலைப் போரைக்
கைவிட் டதுமேன் ஓ! இறைவா?
கூத்திக் குரைத்த நஞ்சை மனையாட்
கீந்த குற்றம் புரிந்தோமா?

பனிப்புழு, பல்பல் லளைகளினாலே
பயிர்வெங் காயம் அழிந்ததனால்
இனிப்புதிதாக விதைத்திடத் தானோ
இன்றுழு கின்றாய் ஈழவயல்?

மண்ணைக் காக்கும் போராட் டத்தை
மதிக்கா தொதுங்கிய பழிதானோ
திண்ணையிலும் நாம் குந்த விடாமல்
திருடர் பிடித்தார் நம்மனைகள்!

மாவீ ரர்தம் தியாகங்கள் தந்த
வளர்ச்சி வஞ்சகர் கைபட்டோ
ஆவா வென்றும் இனமே அலற
அரக்கர் கையில் அழிந்ததையா?

வீரம் வீரம் என்றே வீறி
மென்மை, சாந்தம், அன்பென்னும்
ஈர மனங்கள் இழந்தோ இன்றுன்
இடித்துரை களுக்குள் ளாகின்றோம்!

பகைவன் தனது வெற்றிக் காகப்
பணிந்துன் காலில் வேண்டுகையில்
அகந்தை மிஞ்சி நம்மை நாமே
அடிதொழு திழிந்த பழியுமுண்டோ?

உண்மைப் பற்று மண்மீ தாகி
உயிர்கள் ஈந்தார் மாவீரர்!
உண்மைப் பற்றுத் தம்மீ தாகினோர்
உடைத்தே சாய்த்தார் உரிமைப்போர்!

அரசியல் விண்ணாளரை அலட்சியம் பண்ணி,
அகற்றி, மூலை களிலிருத்தி
அரைவேக் காடுகள் அரசியல் பேசி
அகிலஞ் சினங்கொளச் செய்தோமோ?

இனக்கொலை புரியும் எதிரியை வீழ்த்த
ஏந்திய புனித ஆயுதங்கள்
தனிப்பட்ட எமது பகைவரைச் சதியால்
சாகடித் திட்ட பழிகளுண்டோ?

வேலிக்கென் றீந்த கதிகால் தடிகளில்
வீடுகள் கட்டி விளையாடி
காலிகள் - காட்டாக் காலிகள் வளவுள்
கால்வைத் திடக்கால் ஆனோமோ?

விடுதலை இலக்கிய முகாமை நாமென
விலாசங் காட்டி அன்று கள்ளத்
தொடர்பால் சோரம் போன 'யாக்குயி
லின்'கள் சுகத்'தேன் நிலவு'லின்று!

கருங்கா லிமரம் வெட்டிட வெண்ணெய்க்
கட்டியிற் கத்திகொள் பேதைகளாய்
அருஞ்சந்தப் பாத்தமிழ் அழிக்கவே விடுதலை
அணிபுக்க அரிவரி கள்கழன்றார்!

விடுதலைப் போரினை வேரறுத் திட்டபல
மேதினி நாடுகள் தாய்லங்கா
அடியறத் தமிழினம் இனக்கொலை தொடர்ந்திட
அடியிட்ட பயங்கரம் புரிந்தனவன்றோ?

ஒருவன், ஓரினம் ஒடுக்கப் படல்தனை
உதட்டள வில்மட்டும் குற்றஞ்சொல்லும்
உருசிய, சீன, லிபியமார்க்ஸ் ஸிஸ்டுகள்
உலகமும் இனக்கொலை ஊக்கிற்றிங்கே!

எங்கள் தாய்மண்ணை மீட்கும் தூய
இலட்சியப் போரே நாம்புரிந்தோம்!
எங்களுக்கு குள்நாம் மோதினோம் ஆயினும்
எதிரியின் மண் வவ்வ முயன்றதில்லை!

எமக்கே இத்தனை அழிவுகள் என்றால்
எங்கள் மண்ணைக் கொள்ளையிடும்
எமன்கூட் டத்துச் சிங்களர்க் கெல்லாம்
எப்பெரும் நாசம் வரவுள்ளதோ?

அன்னா சிப்பழம் இன்றெம் வாய்களுள்
அழஅழத் திணிக்கப் படல்கண்டு
பின்னால் றோளிற் பலாப்பழத் தோடு
பேய்ச்சிங் களவன் சிரிக்கின் றான்!

புவியின் வெப்பம் கரியப் புகையால்
பொள்ளல் ஓசொ னாலன்றி
அவலக் கொலைசெய் அரசுக ளால்தான்
அதிகம் கூடும்! உலகழியும்!

மண்விடு தலைக்காய், மகன்மக ளைக்கால்
வயதில் எல்லாம் பலிகொடுத்துப்
புண்பட் டோர்நாம் பூக்கும் ஈழமென்
றின்னும் உனையே போற்றுகின்றோம்!

அகிலம் அறிந்த ஆவணச் சான்றுடை
இசைப்பிரி யாக்கள் அக்கொலைக்காய்ப்
புகலிடம் றேதாறும் புரிகில் ஆர்ப்பாட்டம்
போய்ந்நா ஐ.நா திருந்துமன்றோ?

வன்னியில் வாழ்ந்த நாலரை லட்சத்தில்
வந்தோர் முகாம்கள் மூன்று லட்சம்!
இன்னும் ஒன்றரை லட்சம் தமிழர்க்கு
என்ன நடந்தது? கேட்டெழுவோம்!

புதைபொருள் வரலாறு இலக்கியச் சான்றுகள்
புவிச்சரி தவியல் ஈழத்தின்
அதிபழம் உரிமைக் குடிகள் தமிழரென்
றடித்துச் சொல்வதைப் பார்க்கறைவோம்!

ஆயுதப் போரினால் ஈழப் பிரச்சனை
அறியச் செய்வோம் முழுஉலகும்!
தூய ஆன்மிக வழியில் உலகத்தின்
துணைகொண் டினிமண் மீட்டுயர்வோம்!

அந்நாள் அனுராத புரத்துறை தமிழர்கள்
அன்னை மண்வர நேர்ந்ததுபோல்
இன்றீழ ஊர்களில் இடம்பிடிக்கின்றவன்
இல்கட்டி எம்மிடம் தந்தகல்வான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# தமிழுக்கு ஒரு மதில்

அந்த வீட்டுக்கு எவ்வளவோ காலத்துக்கு முன்பே சீமெந்துக் கற்களால் சுவர் எழுப்பப்பட்டு விட்டது. ஒரு முறை மாடு ஒன்று அந்த மதிலிலே முதுகு தேய்த்த போது அதற்குக் காயம் ஏற்படட்டது கரடு முரடான அந்தச் சுவரினால்! இன்னும் அப்படித்தான். வீட்டுக்காரச் சிறுமி தன் பிஞ்சுக் கைகளால் சிறிது தூரம் அந்த மதிலை விளையாட்டாகத் தடவிச் சென்றாள். பாவம். கைத்தோலை உரசி எடுத்து விட்டது மதில்.

வீட்டுச் சொந்தக்காரர்கள் சிந்தித்தார்கள். என்ன பாதுகாப்புக்கு ஏற்படுத்திய மதில் இப்படிக் கையைப் பதம் பார்க்கிறதே! மதிலும் வேண்டும். அதைத் தொட்டால் சுகமாகவும் இருக்க வேண்டும்! அதோடு பலமாகவும் இருக்க வேண்டும். கரடு முரடாக இருக்கக் கூடாது. என்ன செய்யலாம்? யோசித்தார்கள்!

ஓ! எந்தச் சீமெந்தைப் பாவித்து கற்களை ஒன்றோடு ஒன்று பொருத்தி மதிலைக் கட்டினோமோ அதே சீமெந்துக் கலவையைப் பாவித்து பொருத்தப்பட்ட கற்கள் தெரியாமல் மேலே பூசிவிட்டால் தொடுபவர்களுக்குச் சுகமாகவும் இருக்கும்! மதிலுக்குப் பலமாகவும் இருக்கும்! அழகாகவும் கூட இருக்கும்! அப்படியே செய்து வைத்துவிட்டுப் போனார்கள் வீட்டுச் சொந்தக்காரர்கள்!

இதையே நம் தமிழ் எழுத்து முறைக்கும் செய்து விட்டுப் போனார்கள் எம் முன்னோர்கள். உயிர் எழுத்தையும் மெய் எழுத்தையும் ஓசைக்காக இணைக்கும் நெறியை வகுத்து தந்தார்கள் அவர்கள். சண்முகம் என்ற தமிழ்ப் பெயரை எடுக்கிறோம்.

இதிலே ச்சும் உவும் சேர்ந்த ச என்ற உயிர்மெய் எழுத்தும் ண் என்ற மெய் எழுத்தும் ம்மும் உவும் சேர்ந்த மு என்ற உயிர்மெய் எழுத்தும் க்கும் அவும் சேர்ந்த க என்ற உயிர்மெய் எழுத்தும் ம் என்ற மெய்யெழுத்தும் என்று எட்டு எழுத்துக்கள் உள்ளன.

உயிர்மெய் எழுத்து என்ற ஒன்று தமிழில் இல்லை என்றால் சண்முகம் என்பதை நாங்கள் ச்அண்ம்உக்அம் என்று எட்டு எழுத்துக்களைப் பயன்படுத்தித் தான் எழுத வேண்டியிருக்கும். இதைத் தான் ஆங்கிலத்தில் செய்கிறார்கள். அவர்கள் சண்முகம் என்பதை எட்டு எழுத்துக்களைப் பயன்படுத்தி sanmugam என்று எழுதுகிறார்கள். ஆனால் நாம் உயிர்மெய் எழுத்தைப் பாவித்து ஐந்து எழுத்துக்களில் எழுதி விடுகிறோம்.

இதில் நன்மை என்னவென்றால் எங்களுடைய ஐந்து எழுத்துச் சண்முகத்தை உச்சரிக்கும் போது பூசிய மதிலைத் தடவுவது போல சுகமாகவும் இனிமையாகவும் இருக்கும். ஆனால் உயிர் மெய் எழுத்து இல்லாத ஆங்கிலத்தில் எட்டு எழுத்துச் சண்முகத்தை உச்சரிக்கும் போது பூசாத மதிலைத் தடவுவது போல கரடு முரடாகவும் இனிமையின்றியும் அமையும்.

இதை உணர்ந்து தான் எம் முன்னோர்கள் தமிழுக்கு உயிர்மெய் எழுத்து ஒன்றை உருவாக்கினார்கள்! அவர்கள் மட்டும் உயிர்மெய் எழுத்தைக் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால் ஐந்தெழுத்து சண்முகம் எட்டு எழுத்துக்கள் ஆனது போல எல்லாச் சொற்களும் எழுத்துக்களால் நீண்டு இன்றுள்ள புத்தகங்கள் எல்லாம் இரண்டு மடங்கு பக்கங்களுடன் இருந்திருக்கும்! கடல் என்பதை க்அட்அல் என்று எழுதியிருப்போம்.

ஆங்கிலத்தில் இருபத்தியாறு எழுத்துக்கள் இருப்பது போல தமிழிலும் எழுத்துக்கள் முப்பது மட்டுமே! ஆனால் உயிர்மெய் எழுத்தையும் சேர்த்துத்தான் இருநூற்று நாற்பத்தாறு என்கிறோம்!

உயிர்மெய் எழுத்துக்களே மொழி என்னும் மதிலுக்கு முன்னோர் செய்த பூச்சு வேலையாகும்! பூச்சு வேலை இல்லாவிட்டாலும் மதிலுக்கு ஒன்றுமில்லை. ஆனால் அதில் அழகு இருக்காது.

அப்படிக் கல் அறுத்து மதில் கட்டி அதைப் பூசி அழகு படுத்தி எமக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தி விட்டுப் போன முன்னோரை மதிக்காமல் கணினி வண்டிகள் இலகுவாகப் போக வேண்டும் என்பதற்காக மொழியென்னும் மதிலை இடிக்கப் பார்க்கிறார்கள் இன்று பலர்.

மதிலைச் சேதப்படுத்தாமல் என்ன செய்யலாம்? ஏற்கனவே இருக்கும் வாயிலை எப்படிப் பெரிதாக்கி நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்? ஓலைக் குடிசையில் கைவிளக்கு வெளிச்சத்தில் எந்த வசதியும் அற்ற திண்ணையில் இருந்து சிந்தித்துச் செதுக்கப்பட்ட மொழியைப் புதுமை என்னும் கடற்பாறை கொண்டு தாக்கத் தயாராகும் இன்றைய மொழியியல் வாதிகள் சற்று நின்று நிதானமாக யோசிப்பார்களா? ●

## அதிக கொலைகளுக்கு கத்தியே ஆயுதம்

2010ஆம் ஆண்டில் ரொறன்ரோ நகரப் பகுதியில் 60 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கணிசமானவர்கள் இளையோர்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுமார் இருபது கொலைகளில் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதிகமான கொலைகளுக்கே கத்தியே ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. டவுன் ரவுணிலுள்ள றீஜன்ட்பார்க் பகுதியில் அடுத்தடுத்து பல கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ரொறன்ரோவில் 2009ஆம் ஆண்டில் 61 கொலைகள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# மக்கள் ஆட்சி

மக்களுக்காக மக்களே மக்களை ஆளும் ஆட்சியை ஜனநாயகம் என்ற கௌரவமான பெயரில் அழைக்கிறார்கள்.

எனினும், பெயரைத்தவிர, செயற்பாடுகள் அனைத்துமே ஒருவித வல்லாதிக்க அல்லது மிதமான சர்வாதிகார ஆட்சியை அண்டியவையாகவே, பல நாடுகளில் ஆட்சியமைப்பு நடத்தப்படுகிறது.


அடக்குமுறையும், அதிகார வெறியும், குடும்ப ஆட்சியும் தக்கவைக்கப்படுவதற்காக, மேற்குலகைக் குசிப்படுத்தியபடி, மேற்குலகின் நட்பு சக்திகள் போன்று செயற்படுவதற்கு இணங்கி, மேற்குலகின் சில கட்டுப்பாடுகளை ஏற்பதுபோல பாசாங்கு பண்ணிக்கொண்டு, தங்களது அதிகாரத்தை இரகசியமாகத் திட்டமிட்டு வலுப்படுத்துகின்றன இந்த சக்திகள். இவற்றை சகதிகள் என்றும் சொல்லலாம்.

தாம் ஆட்சி நடத்துகின்ற நாடுகளில், ஆளப்படுகின்ற மக்களினம், தமது அதிகார துஷ்பிரயோகங்களை சகித்துக் கொள்வதற்கு ஏதுவாக, அவர்களுக்குத் திருப்தி தரும் வகையில், சில செயற்பாடுகளை முன்னெடுப்பது ஒரு பிரதான காரணியாக இந்த அடக்குமுறை ஆட்சியாளரிடம் காணப்படுகிறது. குறிப்பாக, தங்களது ஆட்சியைத் தக்க வைப்பதற்கான ஆதரவை அல்லது வாக்குப் பலத்தைக் கொண்டுள்ள குழுமங்களை, ஏதோ ஒரு வகையில் திருப்திப் படுத்துவதற்காக, அவர்களால் வெறுக்கப்படும் சிறுபான்மை இனங்களை அல்லது சமூக, சமய, மொழி, கல்விநிலை, கலை, கலாசார, சாதி வேறுபாடுள்ள இனங்களை நசுக்கி, நாசம் செய்து, வலிந்த வன்முறைக்குள் அவர்களை இழுத்துவந்து, அரச பயங்கரவாதத்தின் அச்ச நிலையில் ஒட்டுமொத்த நாட்டையும் கட்டிப் போடுவதுதான் பல நாடுகளிலும் நடக்கிறது.

ரூனிசியாவில் தொடங்கிய மக்கள் ஆர்ப்பாட்டத்தின் வலு, ஜனவரி 14ல் அந்நாட்டு ஜனாதிபதி பென் அலியை வெளியேற்றியது. ஆர்ப்பாட்டங்களின் போது உச்சக்கட்ட அரச வன்முறை பாவிக்கப்படுவதால் அச்சமடைந்திருந்த மக்கள், ரூனிசிய மக்களுக்குக் கிடைத்த வெற்றியால் புது உத்வேகம் பெற்றனர். 18 நாட்கள் தொடர்ந்த மக்கள் போராட்டம், எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை பெப்ரவரி 11ம் திகதி வெளியேற வைத்தது.

லிபியா, அல்ஜீரியா, சிரியா, ஈரான், யெமன், பாஹ்ரெய்ன், லெபனான், யோர்தான், மொரோக்கோ என இந்த மக்கள் போராட்டங்கள் தொடர்கின்றன. சிரியா, ஈரான் போன்ற பெரிய நாடுகள், தங்களது கோரமான இரகசிய அடிதடிப் படைப் பலத்தைப் பயன்படுத்தி, மக்கள் போராட்டங்களை நசுக்கி விடுவார்கள் என்றும், ஏனைய சிறிய நாடுகளின் தலைமைகள் சற்றே தளர்வடைய வாய்ப்பிருப்பதாகவும் ஆரூடம் கூறப்பட்டது. ஆனாலும், பாரசீக வளைகுடா கடலுக்கு நடுவே வெறும் 1 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட குட்டித்தீவான பாஹ்ரேய்னில், உச்சக்கட்ட அரச வன்முறை பாவிக்கப்பட்டு, மக்கள் எதிர்ப்பு நசுக்கப்பட்டுள்ள நிலைமை, ஏனைய பல நாடுகளிலும் எழுந்துள்ள மக்கள் ஆர்ப்பாட்டங்களைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

அரேபிய மற்றும் வடஆபிரிக்க நாடுகளில், 30, 40 வருடங்கள், எந்தவித ஆட்சி மாற்றமும் இல்லாமல், தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் கொடுங்கோல் ஒற்றையாட்சி முறையில், குடும்ப அதிகாரமும், பணப்பலமும், நிதிச் சூறையாடலும், அடக்குமுறையும் தொடர்ந்து இடம்பெற்று வந்தன. மக்கள் மேற்கொண்ட மிதவாத அல்லது அகிம்சை ரீதியான எதிர்ப்பு முன்னெடுப்புக்கள் அனைத்தும், திட்டமிட்டு ஒட்டுமொத்தமாய்ப் புறக்கணிக்கப்பட்டும், நசுக்கப்பட்டும் வந்த நிலையில், மக்கள் தங்களது முடிவை தாங்களே தங்களது தியாகங்கள் மூலம் பெறத் துடிக்கும் வலு நிலைக்கு வந்துள்ளார்கள் என்பதையே இந்தப் போராட்டங்கள் காட்டுகின்றன.




அரேபிய நாடுகள்

இருப்பினும், இதை மறுக்கின்ற இந்த அடக்குமுறை ஆட்சிப் பீடங்கள், மக்கள் புரட்சி ஏனைய நாடுகளிலும் தொற்றிக் கொள்ளாமல் இருப்பதற்காக, இணைந்த பலாத்கார வன்முறைகளுக்கும் திட்டமிடுகின்றன. அடிப்படைவாதக் கொள்கையாளரிடம் ஆட்சி பறிபோய்விடப் போகிறது என்ற புதிய கவலைகளையும் கருக்கட்ட வைக்கின்றன. அடிமைத் தனத்தின் உச்சக் கட்டத்தில் மக்களைக் கட்டிப்போட்டு, பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் நிலைக்கு அந்நாடுகளை உந்தித் தள்ளிய இந்த அடக்குமுறை ஆட்சியாளர்கள், இனிமேல்தான் அடிப்படைவாதக் கும்பல்கள் தமது நாட்டுக்குப் பாதிப்பை உருவாக்கப் போவதாக கவலைப்பட எத்தனிப்பது ஆய்வுக்குரியது.

ஷியா-சுன்னி என்ற சமய, சமூக, அடிப்படை கருத்தியல் மற்றும் வாழ்வியல் ரீதியான வேற்றுமைகள் உட்பட, சிறுபான்மை இனங்களைப் பழி தீர்ப்பதில் திருப்தியடையும் பெரும்பான்மை இனங்களின் சகிப்புத்தன்மையும், பெருமளவில் இத்தகைய நீண்டகால சுயநல ஆட்சியாளர்களுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

உச்சக்கட்ட ஜனநாயக சித்தாந்த வழிமுறைகளைக் கொள்கைகளாக மட்டுமன்றி, முழுமையாக நடைமுறையிலும் பயன்படுத்துவதாகப் பெருமைப் பட்டுக்கொள்ளும் பல மேற்குலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை, தங்களுக்கு சாதகமான ஆட்சியாளர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இந்த ஆட்சியாளர்களின் கோரமான, வன்முறையான, பலாத்காரமும் அடக்குமுறையும் கொண்ட, நிதிச்சுரண்டல் நிறைந்த, கொடிய ஆட்சிப் பீடங்களைத் தொடர்ந்தும் பாதுகாத்து, போஷித்து, ஆதரவளித்து, காப்பாற்றுவது, எவ்வளவு தூரம் ஜனநாயகத் தகுதரம் கொண்டது என்பதைப் பகுப்பாய்வு செய்வது, 'மக்களாட்சி' எனும் சித்தாந்தத்தின் இருப்புக்கு இன்றியமையாதது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20வது ஆண்டு பூர்த்தி விழா

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தாய்தேசம் கடந்து வாழும் தமிழ்ச்சமூகத்தின், ஆழமான ஆவணப்பதிவாகத் திகழும் தமிழர் சஞ்சிகையின் 20 ம் ஆண்டு பூர்த்தி மலர் வெளியீட்டு விழாவில் மீண்டும் அனைவரும் கூடியிருக்கின்றோம்.

வேறு சில நிகழ்வுகளைப் போல, சம்பிரதாயச் சடங்காக எம்மில் பலர் இங்கே கூடியிருக்கவில்லை. தவறவிடக்கூடாத ஒரு கடமையாகக் கருதி இங்கே வந்திருக்கின்றீர்கள்.

இந்த 20 ஆண்டுகாலத் தொடர்ச்சியில், ஆரம்பத்தில் இருந்தோ, அல்லது இடையிலோ நீங்கள் இணைந்தவராக இருப்பீர்கள். இந்த சஞ்சிகையின் பரிமாணங்களை நன்கு உணர்ந்தவராக இருப்பீர்கள். அதனால் இந்த சஞ்சிகையோடு, இந்த நிகழ்வோடு உளப்பூர்வமாக இணைந்திருக்கின்றீர்கள்.

நானும் அவ்வாறுதான்.

இந்தச் சஞ்சிகை பற்றி, இந்த விழா பற்றி, வெளியீட்டுரை வழங்கக் கிடைத்த வாய்ப்பை நான் உயர்வாக்க் கருதுகின்றேன். நான் குறிப்பிடும் சில விடயங்கள் இந்த உயர்வை உங்களுக்கு உணர்த்தும்.

தாயகத்திற்கு வெளியே, ஒரு அமைப்பாகவோ தனி மனிதனாகவோ வாராந்த இதழை, மாதாந்த சஞ்சிகையை வெளியிடுவது என்பது, பெருமளவில் சவால்களைச் சந்திக்கின்ற, துணிச்சல் மிக்க, விடாமுயற்சி நிறைந்த காரியமாகும். பல இதழ்கள் தொடங்கப்பட்டதை நாம் அறிவோம். கால ஓட்டத்தில் அவை கரைந்து இல்லாமல் போன வரலாறுகளையும் நாம் அறிவோம். எதிர்ப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வல்லமை அற்ற நிலையில், அவை நின்று விடுவது தவிர்க்க முடியாத ஒன்றே.

இந்த காலச் சுழற்சியில், தனக்கென ஒரு தனித்துவத்துடன், எவ்வித தளர்ச்சியும் இன்றி, செருக்கோடு நடைபோடுகின்ற சஞ்சிகை தமிழர் தகவல் ஒன்றே. இந்த இடத்தில் இன்னுமொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். தாயகத்திற்கு வெளியே 20 ஆண்டுகளாக, எவ்வித தடையும் இன்றி, இடைவெளிகளும் இன்றி, பயன்மிக்க ஒரு பயணத்தை நடத்தும் ஒரே மாதாந்த சஞ்சிகை தமிழர் தகவல் மட்டுமே.




மலர் வெளியீட்டுரை

கவிஞர், ஒலிபரப்பாளர்
பொன்னையா
விவேகானந்தன்

இந்த சஞ்சிகை பல வழிகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. துணிவும் ஆற்றலும் மிக்க முதன்மை ஆசிரியர், வலிகள் கடந்து கூடவே பயணிக்கும் குழுவினர், வாழ்வை வரலாறாய்ப் பதிவு செய்யும் படைப்புகள், பருவம் தவறாத பிறப்பு, சஞ்சிகையின் தேவை உணர்ந்து உதவும் வணிகர்கள். இந்த கூட்டணியின் முரண்களற்ற பிணைப்பே, இச் சஞ்சிகையின் வீழ்ச்சி அறியா எழுச்சியின் காரணங்கள். தாய் தேசம் கடந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் சார்பில் இவர்களுக்கு எம் நன்றி.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலம், தமிழர்களுக்கு பெருஞ் சோதனைக்காலம். தமிழருக்கு எதிரான பகைவர்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பது தாய் தேசம் கடந்து வாழும் நாம் மட்டுமே. நம்மை இலக்கு வைத்தே பல சூழ்ச்சிகளைப் பகைவர் உருவாக்குகின்றனர். அவர்களின் முதல் இலக்கு, நம்மிடையே பலமாய் வலம் வரும் ஊடகங்களை உடைப்பது அல்லது உள்வாங்கு- வது. உலகெங்கும் இந்தப்பணிகள் நடக்கின்றன. கனடாவிலும் தான். ஊடகங்களை உற்றுக் கவனிப்போருக்கு இந்த உண்மை தெரியும். பேரத்திற்காகக் காத்திருந்தவர்கள் சோரம் போய்விட்டார்கள். சிலர் விலைப்பட்டார்கள். வேறு சிலர் வலைப்பட்டார்கள்.

தமிழர் தகவல் தலை நிமிர்ந்து தனித்தே நடக்கின்றது. நடக்கும். பேரங்களுக்கு அப்பாற்பட்ட பெரு வாழ்வு இச் சஞ்சிகைக்குரியது. இது தாய் தேசம் கடந்து வாழும் தமிழ்களின் அடையாளம்.


கால் நூற்றாண்டைக் கடந்த வரலாறு எமக்குரியது. இந்தக் கால்நூற்றாண்டுக்குள் நாம் எம்மை இந்த மண்ணில் உருவாக்கிய வரலாறு இதுவரை எழுதப்பட்டிருக்கிறதா? இந்தப் பணியை நீங்கள் செய்ய வேண்டும் என ஒருவரோடு பேசியிருந்தேன். அவர் அதற்கு மிகப் பொருத்தமானவராக இருந்தார். கடந்த ஆண்டு அவரை இங்குதான் கடைசியாகக் கண்டு பேசியிருந்தேன். இபபோது அவர் எம்மிடையே இல்லை. திரு சிவலிங்கம் ஐயா அவர்கள். அவர் இல்லையென்றாலும் அவரது பதிவுகள் இருக்கின்றன. அவர்போன்று பலரது பதிவுகள் இருக்கின்றன. எங்கே

(32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழரின் அடையாளம் 'தமிழர் தகவல்' தகவல் நெடுஞ்சாலையில் இருபதாண்டுப் பயணம்









விழாத் தொகுப்பு
கட்டுரை
23ஆம் பக்கத்தில்



## தமிழர் தகவலின் இரு தசாப்த நண்பர்களுக்கு சிறப்புப் பிரதிகள்






தமிழர் தகவலின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் கடந்த இரு தசாப்தங்களாக தொடர்ந்து பங்காற்றி வந்த ஐவருக்கு ஆண்டு மலரின் சிறப்புப் பிரதிகள் வழங்கி மதிப்புச் செய்யப்பட்டது. பல் மருத்துவர் அ. சண்முகவடிவேல், சிவசிறீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள், சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்,



திரு. கே. சபேசன் ஆகியோர் தகவலின் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்திடமிருந்து சிறப்புப் பிரதிகளைப் பெற்றனர். விழாவில் சமுகமளிக்க முடியாதுபோன தகவலின் தொடர் எழுத்தாளர் திருமதி கனகேஸ்வரி நடராஜாவுக்கான பிரதி பின்னர் அவரிடம் கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாவது ஆண்டு விருது விழா















விபரமான கட்டுரை 23ஆம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Twentieth Annual Awards Ceremony



ஒளிப்படங்கள்: 'A1 கொழும்பு' பிரான்சிஸ் & கே. கமலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வி சாம்பவி சண்முகானந்தம் - செல்வி அபிராமி சண்முகரத்தினம்
# முன்னணி மாணவிகள் இருவருக்கு இளையோர் விருதுகள்









# விருது விழா புரவலர்களுக்கு மதிப்பளிப்பு





விருது வழங்கும் விழாவின் புரவலர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு விழாவின் இறுதியில் இடம்பெற்றது. பிரதம விருந்தினர் பேராசிரியர் பீட்டர் ஷால்க் அவர்கள் திருவாளர்கள் கே. சபேசன், சட்டத்தரணி நாதன் சிறீதரன், திரு. சன் தயாபரன் ஆகியோருக்குப் பட்டயங்கள் வழங்குவதை ஒளிப்படங்களில் காணலாம். மற்றைய புரவலர்களான திருவாளர்கள் கண்ணன் துரைராஜா, பாலன் ரட்ணராஜா, பாபு இராஜகுலசிங்கம், ஈ. கௌசிகன் ஆகியோருக்கான பட்டயங்கள் அவர்களிடம் பின்னர் கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

44

**தரணி ஆண்ட தமிழனுக்கு தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!**

ஏனைய இடைக்காலப் புலவர்களின் பாடல்களைப் படிக்கு முன்பு புத்தாண்டு பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்த நாள் என இந்த ஆண்டு தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் நடத்திய முப்பெரும் விழா பற்றி எழுதலாம் என நினைக்கிறேன்.

தமிழ்ப் புத்தாண்டை முன்னிலைப் படுத்தி புத்தாண்டு, பொங்கல், திருவள்ளுவர் என முப்பெரும் விழாவை தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் 2003 ஆம் ஆண்டு (திருவள்ளுவர் ஆண்டு 2034) கொண்டாடியது. அப்போதெல்லாம் தமிழ்ப் புத்தாண்டு தையா? சித்திரையா? என சூடான கருத்தாடல் இடம் பெற்றது.

சித்திரை அல்ல தை தான் தமிழர்களின் புத்தாண்டு என்பதில் அப்போது வன்னியில் கோலோச்சிக் கொண்டிருந்த தமிழீழ நிழல் அரசு மிகத் தெளிவாக இருந்தது. தமிழீழ நிழல் அரசு தை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாகக் கொள்கின்றது என்பதற்கு விடுதலைப் புலிகளின் கலை, இலக்கிய இதழான 'வெளிச்சம்' இதழ் ஆசிரியர் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி உறுதிப்படுத்தியது.

மேலும் தமிழ்ப் புத்தாண்டு விழா 2034 பொங்கல் விழா இரண்டும் தாயகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டதாக புலிகளின் குரல் வானொலி தனது ஒலிபரப்பில் (சனவரி 15, 2003) ஒலிபரப்பியது.

தமிழர்களின் ஆண்டுத் தொடக்கம் தை முதல் நாள்த்தான் என தமிழக அரசு பெப்ரவரி 01, 2008 இல் தமிழக சட்ட சபையில் சட்டம் இயற்றியது. இந்தச் சட்டம் எதிர்ப்பின்றி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தை முதல் நாளே தைப் புத்தாண்டின் தொடக்க நாள். தைப்பொங்கல் திருநாளுக்கு வானியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கிப் பயணம் செய்யும் ஞாயிறு (பூமியில் இருந்து பார்க்கும்போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்பதாவது தனு இராசியில் பட்டு மகர இராசியில் புகுகின்றான். ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்குப் போக எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.

இப்போது வழக்கில் இருக்கும் "பிரபவ" முதல் "அட்சய" 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்ற அரசனால் கி.பி. 78 இல் அறிமுகப் படுத்தப்பட்டவை ஆகும். இவை வடபுல அரசனால் உருவாக்கப்பட்டதால் வடமொழிப் பெயர்கள் வழங்கப்படலாயிற்று. ஒன்றேனும் தமிழ்ப் பெயர் அல்ல.

இந்தச் சுழற்சி ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பாடு, வாழ்வு முதலியவற்றிற்கு விளைந்த அழிவையும், இழிவையும் கால இடர்ப்பாடுகளையும் எண்ணிப் பார்த்த தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி மாற்று நடவடிக்கை பற்றி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்று தீர்மானித்து அவர் பெயரில் தொடர் ஆண்டைப் பின்பற்றுவதெனவும் அதுவே தமிழ்ப் புத்தாண்டாகக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆங்கில ஆண்டுடன் 31க் கூட்டினால் வள்ளுவராண்டு வரும். இப்போது ஆங்கில ஆண்டு 2011 எனவே வள்ளுவராண்டு 2042 (2011 சக 31) ஆகும்.

திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கம் தைப் பொங்கல் திருநாளான தை முதல் நாள் தொடங்கி மார்கழிக் கடைசியில் முடிவுறும்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரச நாள்குறிப்பிலும், 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்தப் பொங்கல் விழாவே திருவள்ளுவரின் பிறந்த நாளாகவும் தமிழ்ப் புத்தாண்டாகவும் திருவள்ளுவர் ஆண்டின் தொடக்க நாளாகவும் தமிழ்நாடு முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது. தை முதல்நாளும் அடுத்த நாளும் தமிழ்நாட்டில் விடுமுறை நாள்களாகும்.

நாங்கள் புலம்பெயர்ந்து வேறுபட்ட சூழலில் வாழ்ந்தாலும் புத்தாண்டு, பொங்கல் போன்ற பெரு விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் எங்களது மொழி, கலை, பண்பாடு மற்றும் மரபுகளை நாம் போற்றியும் காப்பாற்றியும் வர முடியும். தமிழ்ப் புத்தாண்டும் வள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டும் பிறமொழிப் பண்பாட்டின் படையெடுப்பில் இருந்து தமிழையும் தமிழினத்தையும் மீட்கும் முயற்சியாகும். காலம் கடந்தாவது அதில் பாரிய வெற்றி பெற்றிருக்கிறோம்.

தமிழர்களுக்கு மொழிதான் அடையாளம். சமயம் அல்ல. இந்த விழுமியம் சங்க காலம் தொடக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. சங்க இலக்கியத்தின் சிறப்புகளில் ஒன்று அது சமயம் சாராதது என்பதாகும். அதுவே அதற்கு செம்மொழிச் சிறப்பைத் தேடித் தந்தது.
நாம் எமது முன்னோர் அளித்த செல்வங்களை அடுத்த தலைமுறைக்கும் கையளிக்க வேண்டும்.

எங்கள் குழந்தைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டி அவர்கள் தமிழர்கள் என அடையாளம் காட்ட வேண்டும். ஒரு பிள்ளையின் பெயர் அந்தப் பிள்ளையின் பண்பாட்டின் குறியீடு. தமிழில் சின்னச் சின்ன வண்ண வண்ணப் பெயர்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன. ஆசா, கோசா, யுரேனியா, டில்ஷன், டில்ஷி, ரமேஷ், சுரேஷ் என்ற பொருளற்ற பெயர்களை விட்டு விட்டு தமிழில் கலையரசி, அன்பரசி, அருளரசி, இசையரசி, தமிழரசி, நிலமகள், கலைமகள், திருமகள், குலமகள், தமிழ்மகள், அவ்வை, கோதை, சேரன், சோழன், பாண்டியன், மாறன், அரசன், அழகன், பாரி என்று பொருள் நிறைந்த பெயர்களை வையுங்கள்.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமுள்ள செந்தமிழ்...

எங்கள் வீட்டுத் திருமணங்களை எங்கள் தாய்மொழியான தமிழில் நடத்த வேண்டும். திருக்கோயில் வழிபாட்டை நாயன்மார் காலத்தில் செய்ததுபோல் சலம், பூ, தமிழிசை பாடி வழிபடுங்கள். 'அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுக" எனச் சுந்தரரை சிவனார் கேட்டுக் கொண்டதாக சேக்கிழார் தாம் பாடிய பெரிய புராணத்தில் சொல்கிறார். சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரை பிறக்க வைத்ததன் நோக்கமே 'தமிழில் பாடுவதற்கு' என்கிறார் சேக்கிழார். அதென்ன சொற்றமிழ்? இறைவனைப் பாடுவதற்குரிய மொழி தமிழ் ஒன்றுதான். "உலகம் முழுவதும் இறைவனை அவன் - அவள் என்றுதான் சொல்கின்றன. தமிழில் அவன் என்றால் ஆணாகிவிடுவாய் அவள் என்றால் பெண்ணாகி விடுவாய் அவர் என்ற பொதுச்சொல் தமிழில் இருக்கிறது நான் தப்பித்தேன்" என்று சிவப்பிரகாசர் மகிழ்கிறார்.

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல சில பழமை விரும்பிகள் சித்திரைதான் தமிழரின் புத்தாண்டு என மல்லுக்கு நிற்கிறார்கள். இதில் பேராசிரியர்கள், பண்டிதர்களும் உண்டு. இங்குள்ள ஒரு தமிழ்த் தொலைக்காட்சி சித்திரைப் புத்தாண்டுக்கு வலு சேர்க்க மெத்தப் பாடுபட்டது. ஆனால் அதில் அது வெற்றி பெறப்போவதில்லை. ஆறுகள் மேல்நோக்கி ஓடுவதில்லை. கறந்த பால் முலை புகுவதில்லை. கடைந்த வெண்ணை மோர் புகுவதில்லை. உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடல் புகுவதில்லை. விரிந்த பூவும் உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகுவதில்லை. இவை உலக நியதி.

கனடாவில் உள்ள ஊடகங்கள், திருக்கோயில்கள் தை முதல் நாள் தமிழரின் புத்தாண்டு என எந்த அய்யத்துக்கும் இடம் இல்லாமல் கொண்டாடின. இது தமிழின மறுமலர்ச்சிக்குப் பெரு வெற்றியாகும்! தமிழின மறுமலர்ச்சி இன்றி விடுதலை இல்லை.

நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரை இல்லை உனக்குப் புத்தாண்டு
அண்டிப்பிழைக்க வந்த ஆரியக்கூட்டம் கற்பித்ததே
அறிவுக்கொவ்வா அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழனுக்கு
தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு

எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியது இன்று பலித்து விட்டது.

எங்கும் எதிலும் தமிழ்மொழியைப் பயன்படுத்துவோம். தமிழ்மொழி எங்கள் உயிர். தமிழ்க் கலை எங்கள் மூச்சு. தமிழ்ப் பண்பாடு எங்கள் வாழ்வு எனப் பறை சாற்றுவோம்! (வளரும்)





பா(f)ன்ஸி Fancy Florist பூக்கடை


ஒவ்வொரு வாரமும் தமிழ்நாட்டிலிருந்து இயற்கையான பூக்களை இறக்குமதி செய்கிறோம். திருமணங்களுக்கும் ஆலயங்களுக்கும் தேவையான விசேட பூக்களை உடனடியாகத் தருவித்து வழங்குகின்றோம்.

நறுமணம் கமழும் மல்லிகை, றோஸ், சம்பங்கை மருக்கொழுந்து மற்றும் வாடாமல்லிகை மாலைகளில் நாம் கைதேர்ந்தவர்கள்.

விசேட வழிபாடுகளுக்குரிய வில்வம் இலை, துளசி, அறுகம்புல், மாவிலை, வெற்றிலை, வாழையிலை ஆகியவை எம்மிடமுண்டு.





தொடர்புகளுக்கு வரதன்

1688, Victoria Park Ave., North York, ON

**416 288 1419**

இணையத்தளம்: www.fancyflorist.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20வது தமிழர் தகவல் TAMILS' INFORMATION ஆண்டு

# மலர் வெளியீடும் விருது விழாவும்

கனடாவின் மூத்த ஊடகமாக அடையாளம் கொண்டுள்ள தமிழர் தகவல் சஞ்சிகையின் 20வது ஆண்டு பூர்த்தி நிகழ்வும் 20வது ஆண்டு விருதுகள் வழங்கும் வைபவமும் கடந்த மாதம் 12ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ரொறன்ரோ நகர மண்டப அங்கத்தவர் சபாபீடத்தில் நடைபெற்றது. மலர் வெளியீட்டுடன் நடைபெற்ற முதல் அமர்வுக்கு சமூக சேவையாளர் திரு. கதிர் துரைசிங்கம் தலைமை தாங்கினார்.

செல்வி சாம்பவி சண்முகானந்தம் தமிழ் வாழ்த்தை இசைத்தார். சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. கவிஞரும் எழுத்தாளருமான பொன்னையா விவேகானந்தன் ஆண்டு மலரை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். 'வீணைமைந்தன்' கே.ரி. சண்முகராஜாவின் சிறப்புரை அடுத்து இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் உரையாற்றினார். தமிழர் தகவலின் ஆரம்பத்திலிருந்து அதன் வளர்ச்சியில் பங்காளராகச் செயற்பட்டு வந்த மருத்துவர் அ. சண்முகவடிவேல், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள், திரு. கே. சபேசன் ஆகியோருக்கு ஆண்டு மலரின் சிறப்புப் பிரதிகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.


விருதுகள் வழங்கும் வைபவம் விழாவின் இரண்டாவது அரங்காக திரு. நீதன் சண்முகராஜா தலைமையில் ஆரம்பமானது. ஆங்கிலத்தில் இடம்பெற்ற இவ்வமர்வின் ஆரம்ப உரையை பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் நிகழ்த்தினார். திரு. சண் தயாபரன் வாழ்த்துரை வழங்கினார். பிரதம விருந்தினராக சுவீடன் பல்கலைக்கழகத்தின் சமய வரலாற்றுப் பேராசிரியர் பீற்றர் ஷால்க் (Pro. Peter Schalk) கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தமிழர் தகவலின் இந்த வருடத்திற்கான 'வாழ்நாள் சாதனையாளர் விருது'ம் பேராசிரியர் பீற்றர் ஷால்க் அவர்களுக்கே வழங்கப்பட்டது. மேலும் எண்மருக்கு இவ்வருட தமிழர் தகவலின் விருதுகள் வழங்கப்பட்டது.

விருது பெற்றவர்களை அறிமுகம் செய்து பேராசிரியர் சந்திரகாந்தன், குயின்ரஸ் துரைசிங்கம், தாட்சா சண், அனோஜினி குமாரதாசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பன்முக ஆளுமைச் சேவையாளர் விருதை திரு. சின்னையா சிவனேசன் அவர்களும், பல்துறை வித்தகர் விருதை இளவாலை செ. இராசநாயகம் அவர்களும், சமூக இலக்கிய - எழுத்துப் பணிக்கான விருதினை 'வீணைமைந்தன்' கே.ரி. சண்முகராஜா அவர்களும் பெற்றனர். கலைத்துறைச் சாதனை விருதை திருமதி பிறேமா சிறீஸ்கந்தராஜாவும், மிருதங்க வாத்திய இசைக்கான விருதை கௌரிசங்கர் பாலச்சந்திரனும், தொழிற்துறைக் கல்வி மேம்பாட்டு விருதை கொம்பியுரெக் கல்லூரி அதிபர் கலாநிதி த.வசந்தகுமாரும் பெற்றனர். இம்முறை இளம்பராயத்தினருக்கான விருதை இரண்டு மாணவிகள் பெற்றனர். ரி.வி.ஐ தொலைக்காட்சியில் சுப்பர் சிங்கராகத் தெரிவான செல்வி சாம்பவி சண்முகானந்தம் இசைத் துறைக்கான விருதையும், பல்துறை விளையாட்டுகளிலும் முதலிடம் வகிக்கும் செல்வி அபிராமி சண்முகரத்தினம் முன்னணி வீராங்கனைக்கான விருதையும் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டவாறு சரியாக மூன்று மணிக்கு ஆரம்பமான விழா சரியாக ஐந்து மணிக்கு ஐஸ்வர்யா–அபிநயா சந்துரு சகோதரிகளின் கனடிய தேசிய கீதத்தோடு நிறைவுபெற்றது. இறுதியாக வழமைபோல சிற்றுண்டி உபசாரம் இடம்பெற்றது.


ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers



Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

Dr. Shan - Thursday (morning)
Dr. Yao San (Tue, Fri & Sat
Dr. Brian (monday)
Dr. May (wednesday)

**(416) 690 0121**



## Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
www.computek.edu

*If you are :*

- Currently receving E.I benefits
- Received E.I within past 3 yrs.
- Just finished / received maternity benefits within past 5 yrs

*You may be eligible for HRSDC funding to upgrade your skills*

**NEW LOCATION IN MARKHAM !**

**Diploma**
Early Childcare Assistant
Network Engineering
Personal Support Worker (PSW )
Computerized Accounting
Business Administration
Medical Office Admin (MOA)

Certificate
MS Office, A+, C/C++ , Java
AccPac, Quick Books
Simply Accounting

**Markham Campus**
Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)
905.471.3344

**Scaborough Campus**
Kennedy / Sheppard
(North-East Corner)
416-321-9911

**Toronto Campus**
Kennedy / Eglinton
N/W Corner, Above Library
426.285.9941

PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

12

மனமும் எண்ணமும் இணைந்தே செயல்படுகின்றன. மனதிலிருந்து எண்ண அலைகள் புறப்படுகின்றன. எனினும் எண்ண அலைகளை பரவ விடாமல் தடுத்து, அந்த அலைகளை ஒருநிலைப்படுத்தினால் மட்டுமே மனம் வலிமை பெறும்.

கனடாவின் அறிவியல் அறிஞர், சிந்தனாவாதி ஜேக்கவ் - ஏ, புள்ளான் என்பவர் கூறிய கருத்துரை பின்வருமாறு அமைகின்றது. "எண்ணங்கள் கட்டுப்படாத நிலையில் கடல் அலைகளைப் போல் காரணமின்றி அலைமோதி தன் ஆற்றலை - மனதின் சக்தியை வீணடிக்கின்றன. இவ்வாறு அலைபாயும் எண்ணங்களைக் கட்டுப்படுத்தி ஒருமுனை நோக்கிய நிலையில் நிறுத்தும் போது, எண்ணங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மின்சக்தி பெற்று விடுகின்றன. இவ்வாறு எண்ணங்களின் அதிசயிக்கத் தக்க மின்சக்தியை நாம் விரும்புகின்ற திசையில் அது எவ்வளவு தூரத்திலிருந்தாலும் செலுத்தி, சிந்தனக்கும் - கற்பனைக்கும் எட்டாத சாதனைகளை - ஆற்றல்களை - ஆச்சரியங்களைச் செய்ய முடியும்.

சுவாமி விவேகானந்தர் கூட எண்ணங்களின் மின் ஆற்றலைப் பற்றிக் கூறியுள்ளார். "அசாதாரண சக்தி மாபெரும் சக்தி - தெய்வ சக்தி மனித மனதில் எண்ணங்களின் வடிவில் படிந்திருக்கின்றது. வெளியே கண்களுக்கு புலப்படாது இயங்கும் அகண்ட மனதின் ஒரு சிறிய பகுதியே மனித மனம். ஒவ்வொரு மனித மனமும் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளும் ஆற்றல் கொண்டது" என்பது அவரது கருத்தாகும்.

மனதின் எண்ணங்களை அனுப்பும் சக்தி வாய்ந்த மனிதன், அதை வலுப்படுத்தி சீர் செய்து கொண்டால் பிரபஞ்ச வெளியோடு - ஆகாய வெளியோடு தொடர்பு கொள்ளலாம். தகுந்த பயிற்சியும், அதற்கேற்ற முயற்சியும் இதற்கு வேண்டும். உயர் பண்பும், எவ்வுயிரையும் தன்னுயிராக கருதும் பண்பும், தெய்வ பக்தியும், பிறர் பசி போக்கும் அருங்குணங்களும் இதற்கு அத்தியாவசிய தேவையாகும்.

இன்று மனம் சீர்குலைந்து பாதிப்புறுபவர்களே பலராவர். அவர்கள் முக்கியமாக இதனை சீர் செய்யும் போது வாடி வதங்கிக் கிடந்த உடலில் புது மினுமினுப்பும், தெம்பும், தெளிவும் பிறக்கும். அவர்களது தோற்றத்தில் கம்பீரமும், நடையில் ஒரு மிடுக்கும் காணப்படும். உடலில் நம்ப முடியாத ஒரு புதுமையான உணர்ச்சி ஏற்பட்டு, உடல் பொலிவுடன் காணப்படும். இந்த அதிசய மாற்றம் உடலுக்கான மருந்தால் ஏற்படவில்லை! மனதில் ஏற்பட்ட மாற்றத்தாலேயே நிகழ்ந்துள்ளது.

வாழ்க்கையில் மிண்டும் ஒரு நம்பிக்கை, மனத்தைரியமும் மனோ சக்தியும் பெருகி விட்டது; மனதில் வலிமையால் எண்ணங்கள் ஒருங்கிணைந்து மாபெரும் ஆற்றல் சக்தியாகி புதுப் பொலிவையும் வசீகரத்தையும் கொடுத்துவிட்டது.

மனதினை உயர்ந்த எண்ணங்களால் நிரப்புவோம்.

மிண்டும் சந்திப்பேன். ●

KEV TAX

Knowledge and Experience is Vital

- Year Round Income Tax Services starting at $7.99.
- Bookkeeping/Accounting Servics for Small Business.
- GST/HST Filing.
- Business Registration.
- RESP and RRSP Savings Plans

Office:
574 Parliament Street
*near the Corner of Parliament & Wellesley inside of Aramiy Video Vision.*




Please call and make an appointment.



S. GANTHIY
416.841.1866



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"THINKING OF BUYING OR SELLING"

**Residential and Commercial Buying / Selling & Leasing**

DIAMOND CLUB AWARD - 2010

GOLD CLUB AWARD - 2009

*Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers*



**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email: sinnahrajagopal@gmail.com

Make the Right Move, at the Right Time, with the Right Professional

**HomeLife /Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**Bus.: 416.264.0101**
Fax : 905.201.9229
*Independently Owned and Operated, REALTOR



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் 50

தற்பொழுது எல்லோரும் தத்தமது வருமானவரிப் பத்திரங்களைப் பூர்த்திசெய்யும் காலமாகையால் இவை சம்பந்தமான சில விடயங்களை பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

அது மாத்திரமன்றி, வருமானவரி சம்பந்தமான விடயங்களைக் கட்டுரை வடிவத்தில் தருவதிலும் பார்க்க கேள்வி பதில் வடிவத்தில் தரும்போது புரிந்து கொள்வது இலகுவாக இருக்குமென பல வாசகர்கள் என்னிடம் வேண்டுகோளாகக் கேட்டார்கள்.

வருமான வரிப் பத்திரம் பூர்த்திசெய்து கொடுப்பவர் என்ற வகையில் தொலைபேசியில் பலர் என்னை அழைத்து பல்வேறு வகைப்பட்ட கேள்விகளைக் கேட்டிருக்கின்றனர். எனவே, பயன்தரக் கூடிய கேள்விகளுக்கு பதில் தரும் வகையில் வெள்ளிப் பணத் தொடர் தொடருகின்றது.

கேள்வி: நான் 2010ஆம் ஆண்டு இரண்டு இடத்தில் தொழில் புரிந்தேன். ஒன்று உணவகம். இதற்கு எனக்கு T4 பத்திரம் தந்தார்கள். இரண்டாவது - அலுவலகங்களைத் துப்புரவு செய்யும் தொழில். இதற்கும் T4A என்னும் பத்திரம் தந்தார்கள். இது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில்: T4 பத்திரம் என்பது சம்பளத்தின் அடிப்படையில் பொதுவாக மணித்தியாலத்துக்கோ மாதத்துக்கோ குறிப்பிட்ட தொகை என்கின்ற அடிப்படையில் நீங்கள் 2010ஆம் ஆண்டு மொத்தமாகப் பெற்ற தொகை, அந்தப் பத்திரத்தில் Box 14 இல் போடப்பட்டிருக்கும். அதேபோன்று Box 16இல் கனடிய ஓய்வூதியத்துக்கான பங்களிப்புத் தொகை போடப்பட்டிருக்கும். அடுத்ததாக Box 18இல் வேலையற்றோர் காப்புறுதிக் கட்டணம் செலுத்திய தொகை குறிப்பிடப்பட்டிருக்கும். இதுபோல Box 22 இல் நீங்கள் வருமான வரியாகச் செலுத்திய தொகை குறிக்கப்பட்டிருக்கும். இந்த நான்கு தரவுகளும் முக்கியமானவை. இவை தவிர, இன்னும் பல தரவுகளுக்கான பெட்டிகள் இருக்கின்றன. அது சில நிறுவனங்களுக்குப் பொருத்தமாகவும் சிலவற்றுக்குப் பொருத்தமற்றவையாகவும் இருக்கும்.

அடுத்ததாக, T4A பத்திரம் ஒப்பந்த அடிப்படையில் வேலை பெறுபவர்களுக்கும், கொமிசன் அடிப்படையில் தொழில் புரிபவர்களுக்குமாகக் கொடுக்கப்படுவது. இதில் Box 20 க்குள் மாத்திரம் நீங்கள் பெற்றுக்கொண்ட தொகை போடப்பட்டிருக்கும். T4 A பத்திரம் பெறுபவர்கள் சொந்த தொழில் புரிபவராகக் கருதப்படுகின்றார். எனவே, வருமானவரிப் பத்திரம் பூர்த்திசெய்யும்போது கனேடிய இளைப்பாற்றுத் திட்டத்துக்கான பங்களிப்பினை நீங்கள் செலுத்துதல் அவசியம். ஆனால், பலருக்கு வரிமீள் பெறுகை பெறும்போது அதற்குரிய பணம் கழிக்கப்பட்டுத்தான் கொடுக்கப்படுகின்றது என்பது தெரியாமல் போகின்றது.

இந்த T4A பத்திரம் இன்னும் வேறு சில குறிப்பிட்ட கொடுப்பனவுகளின் தேவைகளுக்கும் பாவிக்கப்படுகின்றன. ஆனால், பெட்டி 20 இல் குறிப்பிட்ட தொகை சுயதொழில் பார்ப்பவர்களுக்காகக் கொடுக்கப்படும் தொகையைக் குறித்து நிற்கிறது.

அடுத்ததாக பொதுவாகவே பெரும்பானவர்களால் முன்வைக்கப்படும் கேள்வியாக இருப்பது நாம் உழைக்கும் தொகையில் எவ்வளவு தொகைக்கு நாம் வரி செலுத்தத் தேவையில்லை என்பதாகும்.
வருமானவரி விடயத்தில் மத்திய மாகாண அரசுகளின் வரிவிலக்குத் தொகை வேறுபட்டு அமைகின்றன. இதில் மாகாண அரசான ஒன்ராறியோ மாகாண அரசின் வரிவிலக்கு தொகையாக $8,943 டாலர் அமைகின்றது. மத்திய அரசின் தொகையாக $10,382 டாலர் இருக்கின்றது. இது ஒரு தனி நபருக்கான வரிவிலக்குத் தொகையாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8

**416-412-3838**
**416-836-5825**





சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது 31

## Seashell art


கடல் வாழ் முள்ளந்தண்டில்லா மிருகங்களின் பகுதிகளே சிப்பிகள் சோகிகள் என்பனவாகும். பொதுவாக இவை இம் முள்ளந்தண்டில்லா மிருகங்களினைப் பாதுகாப்பதற்காக அவற்றின் வெளிப்புறம் காணப்படினும் சில மிருகங்களில் இவ்வாறான தடித்த ஓடுகள் உள்ளேயும் காணப்படுகின்றன. பொதுவாக மொலஸ்க் எனப்படும் உயிரியின் ஓடுகளே சிப்பிகள் ஆகும்.



அவுஸ்திரேலியன் சிப்பிகளே மிகவும் அழகு நிறைந்தனவாகவும் அளவில் பெரியனவாயும் பெயர் பெற்றனவாகவும் காணப்படுகின்றன. சிப்பிகள் பற்றி படிப்பது Conchology எனப்படும். சிப்பிகள் பலவிதமாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவையாவன oregon hairy triton, leafy hornmouth, apple murex, thick lipped drill, giant forreria, emarginate dogwinkle, scaled worm shell, west indian worm shell என்பன பிரசித்தி வாய்ந்தனவாக்க் கொள்ளப் படுகின்றன.

கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பிற்காக அவற்றினால் உருவாக்கப்பட்ட இந்த ஓடுகள் சிப்பிகள் என்பன பல நூற்றாண்டு காலமாக கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பாவிக்கப்பட்டு வருகின்றன. 1800 களின் கடைப் பகுதியிலும் 1900 ஆண்டளவின் முதற் பகுதியிலும் கைவினைப் பொருட்கள் செய்வதற்கு Victorian crafters இனால் இவை அதிகமாகப் பாவிக்கப் பட்டதாக சான்றுகள் கூறுகின்றன. இந்த வகையான சிப்பிகள் சோகிகளை வர்ணம் தீட்டியும் வர்ணம் தீட்டாமலேயே உள்ளது உள்ளபடியேயும் பலவிதமான பொருட்கள் செய்யப்படுகின்றன. பூச்சாடிகள் தொங்கவிடும் micrame basket, பூச்சாடிகள், பெட்டிகள், படங்களின் சட்டங்கள் (frames) என்பன இவற்றை கொண்டு தயாரிக்கப் படுகின்றன. அதுமட்டுமல்லாது சின்ன சங்கு போன்ற சிப்பிகளினால் பெண்கள் அணியும் மாலைகள் வளையல்கள் என்பனவும் செய்யப்படுகின்றன. பார்க்கப் போனால் கடல் வாழ் உயிரினங்களின் இவ் ஓடுகள் வீட்டையும் பெண்களையும் அலங்காரம் செய்வதற்கு மிகவும் அதிகமாக உபயோகப் படுத்தப் படுகின்றன. இவ்வாறான இந்த சிப்பிகளைக் கொண்டு எவ்வாறு நாம் கைவினைப் பொருட்கள் செய்யலாம் என இன்று பார்ப்போம்.

தேவையான பொருட்கள் - ஒட்டுவதற்குரிய பசை, சிப்பி
இந்த சிப்பி வகைகள் மிகவும் மலிவாக டாலர் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் ஒட்டுவதற்கு aleene's tacky glue என்னும் பசையினை walmart இல் பெற்றுக் கொள்ளலாம்.



செய்யும் முறை:
இந்த சிப்பிகளில் நாம் ஊரி, சிப்பி என்று பலவகையாகப் பிரிப்பது உண்டு. சில பூவின் இதழ்கள் போன்று இருக்கும். இவற்றைத் தெரிந்து எடுத்து அவற்றின் மேற்புறத்தில் ஒட்டும் பசையினைப் பூசி (உள்புறம் வெளியில் தெரியும் வண்ணம்) ஒரு பூப் போன்ற உருவில் வரும்படி ஒட்ட வேண்டும். இப் பட்த்தில் இருப்பது மிகவும் சுலபமாக செய்யக் கூடியது. சில சிப்பிகளையும் ஊரியினையும் சேர்த்து ஒரு பூ செய்திருக்கின்றேன். அந்தந்த அமைப்பில் ஊரிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றனவேயன்றி பெரிய வேலை எதுவும் இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின்
சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால்
அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக
விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்.

2010முதல் அதிகமான பொருட்கள்
எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த
பொருட்களோ, விலையோ வேறு **எங்கும்** கிடைக்காது.

On high, with your thoughts



**PROMAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

***585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5***

**AB LEGAL SERVICES**
Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A1 கொழும்பு

டிஜிட்டல் போட்டோ
ஸ்ரூடியோ & வீடியோ

முதல் தரமானஅனைத்து
போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ
வீடியோ வேலைகள்



From:
அல்பத்துடன் போட்டோ PACKAGES

25 - 5X7 பிறந்த நாள் $125.00

75 - 5x7 அரங்கேற்றம் $375.00

50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $250.00

25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு $125.00

25 - 5x7 முதன் நன்மை $125.00

10 - 5X7 பட்டமளிப்பு விழா படங்கள் $50.00

75-5x7 திருமணவிழா $375.00

2 பாஸ்போட் 5 நிமிடத்தில் $10.00

2 சிற்றிசன் 5 நிமிடத்தில் $10.00

2 லான்டட் காட் 5 நிமிடத்தில் $10.00

2 அனைத்துவிதமான ஐ. டி. 5 நிமிடத்தில் $10.00

3 - 5X7 ஸ்ரூடியோ போட்டோ $30.00

ST-FRANCIS
L.L-3, 2296 EGLINTON AVE. E
@ BIRCHMOUNT ROAD

416-752-4444
Tel: 416-755-2333
416-613-2818

Web: www.tamilsyellowpages.com
E-Mail:www.typ@gmail.com




எஸ். கணேஷ்

# கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டங்கள்

தற்போது கிரிக்கெட் திருவிழா தொங்கி விட்டது. உலக கிண்ணப் போட்டிகள் பெப். 19ஆம் திகதி தொடங்கி ஏப்ரல் 02ஆம் திகதி வரை மூன்று நாடுகளில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறுகின்றது. இது 10வது உலக கிண்ணம் ஆகும். இதுவரை மேற்கிந்திய தீவுகள் இரண்டு தடவைகளும் (1975, 1979), அவுஸ்திரேலியா 4 தடவைகளும் (2007, 2003, 1999, 1987), இலங்கை ஒரு தடவையும் (1996) இந்தியா (1983) பாகிஸ்தான் (1992) உலக கிண்ணத்தை கைப்பற்றியுள்ளன. இம்முறை பொறுத்திருந்து பார்ப்போம் யார் கைப்பற்றப் போகிறார்கள் என்பதை. தற்போது நிலவும் கிரிக்கெட் காய்ச்சலால் ரசிகர்கள் பீடிக்கப்பட்டு இருக்கும் நிலையில் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது.

உலக அரங்கில் கால்பந்துக்கு அடுத்து அதிக ரசிகர்களைக் கொண்டது கிரிக்கெட் தான். விரைவில் கால் பந்துக்கு நிகராக கிரிக்கெட்டுக்கு ரசிகர் பட்டாளம் விரிவடையும் என்பது உண்மை. இதற்கு முக்கிய காரணம் "டுவெண்டி-20" போட்டிகள் மட்டுமே இருக்கும் என்ற சூழ்நிலை கூட ஏற்படலாம்.

கால்பந்து, ஹாக்கி, டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளில் பல்வேறு பரிமாணங்கள் இல்லை. ஆனால் கிரிக்கெட்டில் மட்டும் "டெஸ்ட், 50 ஓவர், 20 ஓவர் என மூன்று பரிமாணங்கள் காணப்படுகின்றன. இதில் ஒன்று எழுச்சி பெற்றால், மற்றொன்று வீழ்ச்சி அடைய தொடங்குகிறது!

"டுவண்டி-20" போட்டிகளின் அதிரடி ஆட்டங்களையும் அசுர வளர்ச்சியையும் ரசிகர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். "ஐபிஎல்-(IPL) என்ற ஒரு அமைப்பு துவங்கியதற்கே டெஸ்ட் போட்டிகள் பெருமளவு பாதிக்கப்படுகிறது. விரைவில் இங்கிலாந்து பிரிமியர் லீக் (E.P.L), அமெரிக்கன் பிரிமியர் லீக் (A.P.L) அமைப்புகள் துவங்கப்பட உள்ளன. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகள் கூடுதலான பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

பணம் மற்றும் காயத்தின் அடிப்படையில் வீரர்கள் டெஸ்ட் போட்டிகளை புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர். இதே கருத்தை சமீபத்தில் இந்திய அணியின் பயிற்சியாளர் கிறிங்டனும் தெரிவித்துள்ளார். வீரர்களின் மனநிலை மட்டுமன்றி ரசிகர்களின் மனநிலையும் மாறத் தொடங்கியுள்ளது. டெஸ்ட் போட்டிகளை பார்க்க தற்போது ரசிகர் ஆவல் காட்டுவதில்லை. ஒரு போட்டியின் முடிவுக்கு ஐந்து நாட்கள் காத்திருக்க ரசிகர்கள் விரும்பவில்லை. 3 மணி நேரத்தில் முடிவு கிடைக்கும் "டுவெண்டி-20" போட்டிகளே ரசிகர்களை பெருமளவு கவர்ந்து விட்டது.

கிரிக்கெட் என்றாலே "டெஸ்ட்" போட்டிகள் தான் என்ற காலம் தற்போது மலையேறி விட்டது. வீரர்களின் உண்மையான திறமையை வெளிக் கொணரும் ஆற்றல் டெஸ்ட் போட்டிகளுக்கு உண்டு. ஓவர்கள் வரையறை இல்லாததால், துடுப்பாட்ட வீரர்களும் சரி பந்து வீச்சாளர்களும் சரி தமது திறமையை நிரூபிக்க அதிக காலம் எடுத்துக் கொள்வார்கள். இதன் மூலம் பெரும்பாலான வீரர்கள் அடிக்கடி காயத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் அதிகம். அதே நேரத்தில் 20 போட்டிகளில் அதிகளவு பணமும் வீரர்கள் சம்பாதிக்கிறார்கள். 2008ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த I.P.L தொடரில் சென்னை சுப்பர் கின்னஸ் அணியின் கேப்டன் தோனி அடிக்கும் ஒவ்வொரு ஓட்டங்களுக்கும் லட்ச ரூபாய்கள் கொடுக்கப்பட்டன! இதே நிலை தொடர்ந்தால் பாரம்பரியம் மிக்க டெஸ்ட் போட்டிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்பது மிகையாகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
Scholarship Plan [RESP]
Any Referral Service
JRB Universal Inc.
Almost All Services Available
B: 416 752 7555
C: 416 937 9081

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
• Credit Counseling • Accounting & Tax Services •

தாய்தேசம் கடந்து வாழும் தமிழ்ச்சமூகத்தின், ஆழமான ஆவணப்பதிவாகத் திகழும் தமிழர் சஞ்சிகையின் 20 ம் ஆண்டு பூர்த்தி மலர் வெளியீட்டு விழாவில் மீண்டும் அனைவரும் கூடியிருக்கின்றோம்.

வேறு சில நிகழ்வுகளைப் போல, சம்பிரதாயச் சடங்காக எம்மில் பலர் இங்கே கூடியிருக்கவில்லை. தவறவிடக்கூடாத ஒரு கடமையாகக் கருதி இங்கே வந்திருக்கின்றீர்கள்.


இந்த 20 ஆண்டுகாலத் தொடர்ச்சியில், ஆரம்பத்தில் இருந்தோ, அல்லது இடையிலோ நீங்கள் இணைந்தவராக இருப்பீர்கள். இந்த சஞ்சிகையின் பரிமாணங்களை நன்கு உணர்ந்தவராக இருப்பீர்கள். அதனால் இந்த சஞ்சிகையோடு, இந்த நிகழ்வோடு உளப்பூர்வமாக இணைந்திருக்கின்றீர்கள்.

நானும் அவ்வாறுதான்.

இந்தச் சஞ்சிகை பற்றி, இந்த விழா பற்றி, வெளியீட்டுரை வழங்கக் கிடைத்த வாய்ப்பை நான் உயர்வா- கக் கருதுகின்றேன். நான் குறிப்பிடும் சில விடயங்கள் இந்த உயர்வை உங்களுக்கு உணர்த்தும்.

தாயகத்திற்கு வெளியே, ஒரு அமைப்பாகவோ தனி மனிதனாகவோ வாராந்த இதழை, மாதாந்த சஞ்சிகையை வெளியிடுவது என்பது, பெருமளவில் சவால்களைச் சந்திக்கின்ற, துணிச்சல் மிக்க, விடாமுயற்சி நிறைந்த காரியமாகும். பல இதழ்கள் தொடங்கப்பட்டதை நாம் அறிவோம். கால ஓட்டத்தில் அவை கரைந்து இல்லாமல் போன வரலாறுகளையும் நாம் அறிவோம். எதிர்ப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வல்லமை அற்ற நிலையில், அவை நின்று விடுவது தவிர்க்க முடியாத ஒன்றே.

இந்த காலச் சுழற்சியில், தனக்கென ஒரு தனித்துவத்துடன், எவ்வித தளர்ச்சியும் இன்றி, செருக்கோடு நடைபோடுகின்ற சஞ்சிகை தமிழர் தகவல் ஒன்றே. இந்த இடத்தில் இன்னுமொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். தாயகத்திற்கு வெளியே 20 ஆண்டுகளாக, எவ்வித தடையும் இன்றி, இடைவெளி- களும் இன்றி, பயன்மிக்க ஒரு பயணத்தை நடத்தும் ஒரே மாதாந்த சஞ்சிகை தமிழர் தகவல் மட்டுமே.
இந்த சஞ்சிகை பல வழிகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. துணிவும் ஆற்றலும் மிக்க முதன்மை ஆசிரியர், வலிகள் கடந்து கூடவே பயணிக்கும் குழுவினர், வாழ்வை வரலாறாய்ப் பதிவு செய்யும் படைப்புகள், பருவம் தவறாத பிறப்பு,

CGA
THE NAME YOU NEED FOR YOUR BUSINESS

Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com
NIMAL VINAYAGAMOORTHY
Certified General Accountant
2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலஸ்ட்ரோல்..

அம்சங்களையும், குடும்பக் குணாதிசயங்களையும், கொலஸ்டரோலையும் இணைத்துக் கொள்ளலாம்.

தொடர்ந்த இரத்தப் பரிசோதனைகளும் மருத்துவ ஆலோசனையும் இவை முடியாது என்பதால் கொலஸ்டரோல் மாத்திரைகளைத் தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். ஆனால் மருத்துவர் ஒரு முறை எழுதித் தந்த மாத்திரைகளை தொடர்ந்து பாவிக்க முடியாது.
மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை செய்து அதிலுள்ள மாற்றங்களுக்கு எற்ப மருந்துகளின் அளவுகளிலும், வகையிலும் மாற்றங்கள் செய்ய நேரலாம்.
அவ்வாறு காலக்கிரமத்தில் இரத்தப் பரிசோதனைகள் செய்வது கொலஸ்டரோல் குறைந்திருக்கிறதா என்பதைக் கணிக்க மாத்திரமல்ல, தொடர்ந்து மருந்துகள் உபயோகிப்பதால் உடல் நலத்திற்கு வேறு கேடுகள் இருக்கிறதா என்பதை அறியவும்தான். இதனால் தொடர்ந்து மருந்துகள் உபயோகிப்பதால் வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்படும் சாத்தியமும் இல்லை.

எனவே கொலஸ்டரோல் பிரச்சனைக்கு
மருந்துகள் தேவையா இல்லையா,
எந்த மருந்து தேவை,
எவ்வளவு காலத்திற்கு தேவை

என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை உங்கள் மருத்துவரிடம் விட்டுவிடுங்கள்.
ஆனால் அவை பற்றிய உங்கள் சந்தேகங்களை மருத்துவரிடம் கேட்கும் உரிமை உங்களுக்கு உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். உங்கள் சந்தேகங்களுக்கு விடையளிக்க வேண்டிய கடப்பாடு அவருக்கு உள்ளது. நிறைவேற்று அதிகாரம் உள்ளவர்களும் மக்களின் உரிமைகளை மதிக்க வேண்டியுள்ளது அல்லவா? அது போலத்தான்.

வருக)

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்..

உருவாக்குதல், தமிழ்த் தேசியவாதிகளின் உணர்வுகளை நிராகரித்து, தனிப் பயணம் மேற்கொள்வது போன்ற தேசியச் சிதைவு நடவடிக்கைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நிறுத்தி, மக்கள் மன்றங்களில் வாதங்களை முன் வைத்து தமிழீழம் நோக்கிய பாதையில் ஒன்றிணைந்து பயணிக்கும் முயற்சியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நேர்மையுடன் ஈடுபட வேண்டும்.

மக்களதும், தமிழ்த் தேசியவாதிகளையும் தொடர்ந்தும் நிராகரிப்பது, நாடு கடந்த தமிழீழ அரசு என்ற மதிப்பிற்குரிய சொற்பதத்தை செயலிழக்கச் செய்யும் முயற்சியாகவே மக்களால் உணரப்படும். இதுவே, அண்மைக்காலமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிகழ்வுகளை மக்கள் புறக்கணிப்பதற்கான காரணமாக உள்ளது.

எனவே, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மக்கள் பிர-திநிதிகள் அனைவரும் திறந்த மனத்துடன் கலந்துரையாடி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழ விடுதலைக்கான பாதையில் நேர்மையாகப் பயணிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- கரிகாலன்

நன்றி:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Children's Education Trust of Canada

offered to the public by

## Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


# அமரத்துவ அறிவித்தல்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த
**திருமதி. பரமேஸ்வரி பரமநாதன்**
அவர்கள் பெப்ரவரி 24, 2011 அன்று
அமரத்துவமெய்தினார்.

இவர் காலஞ்சென்ற பரமநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், மாலதி, கலாவதி, ரேவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானகுருபரன், இராஜேந்திரா, சசிகரன், புஷ்பராஜா ஆகியோரின் மாமியாரும், சிறிதரன், லக்ஷ்மன், அமிருதா, அருமிதா, கீர்த்திகன், அக்ஷலா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். இவர் காலஞ்சென்ற பூபாலசிங்கம், சிதம்பரநாதன், இராஜேஸ்வரி மற்றும் பரராஜசிங்கம், பவளரெத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மினியின் பெரியம்மாவும், ஜீவதாஸ், யோகேஸ்வரன், உமாகாந்தன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் பெப்ரவரி 28, 2011, திங்கட்கிழமை 1010/37 காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அன்று மாலை கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: ரேவதி (கனடா) 905 285 0721


HERITAGE
Education Funds

**RESP
SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

It's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX
PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866
416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

**பல் சிகிச்சை நிலையம்**

BRACE FOR A GREAT SMILE

**பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

DR. ILLANGO & ASSOCIATES


## Dr. M. ILLANGO
B.D.S Dip.Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

## Dr. ALI ADIBFAR
D.D.S, M.D, F.R.C.D (C) , Oral Surgeon

## Dr. MEHRAN MOJGANI
D.D.S. Dip. Perio, Gum Specialist
பல் முரசு வைத்திய நிபுணர்

## Dr. JANAKI ILLANGO
B.D.S.
குடும்ப பல் வைத்தியர்

## Dr. TEHCHIN HSIEH
D.D.S
குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்


**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

## NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org